விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஆனி 28 றம்ழான் 20 இதழ் 149

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 12—7—82

## கூட்டணி எம். பி.க்கள் ஆலோசனை

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிககள் நேற்றுப் பிற்பகல் அவசரமாகக்கூடி சில முக்கிய விஷயங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

நல்லூர் எம். பி. திரு எம் சிவசிதம்பரத்தின் அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

எதிர்க்கட்சி முதல்வர் திரு அ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம், திரு. க. துரைரத்தினம், திரு. வி.என் நவரத்தினம், திரு. த. இராசலிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம் திரு. எம். ஆலாலசுந்தரம், திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோர்இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அண்மையில் நெல்லியடியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து வடபதியில் எழுந்துள்ள நிலைமை குறித்தும்; லண்டன், நியூயோர்க் ஆகிய இடங்களில் நடைபெற்ற தமிழீழ மகாநாடு பற்றியும் இக்கூட்டத்தில் பரஸ்பரம் கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது. (மா)

## இன்று தீர்ப்பு

(கொழும்பு)

விமானக் கடத்தல் சட்ட மூலம் அரசியலமைப்புக்கு இசைவானதா என்பதுகுறித்து இன்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்.

இச்சட்டமூலம் இம்மாதம் 21ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வுள்ளது தெரிந்ததே. (வெ)

★ தண்டவாள இணைப்புத் தகடுகளை அகற்றி

# மட்டக்களப்பு தபால் ரயிலைக் கவிழ்க்க முயற்சி!

## ரயில் என்ஜின் பாதைவிலகி முந்நூறுயார் ஓடியது!

(கல்லோயா)

கொழும்பு-மட்டக்களப்பு இரவு தபால் புகையிரதவண்டியைக் கவிழ்க்க மேற்கொள்ளப்பட்ட சதிமுயற்சி, ரயில் சாரதியின் சாதுரியத் திறல் தவிர்க்கப்பட்டு நூற்றுக்கணக்கான பிரயாணிகளின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது!

தண்டவாள இணைப்புத் தகடுகளை (பிஷ் பிளேட்ஸ்) அகற்றி ரயிலை கவிழ்க்க சதி மேற்கொள்ளப்பட்டிருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு கொழும்புகோட்டையை விட்டுப்புறப்பட்ட மட்டக்களப்பு தபால் புகையிரத வண்டி, பளுகஸ்வெவா ரயில் நிலையத்தைவிட்டுப்புறப்பட்ட சிலமணிநேரத்தில் இவ்விபத்து நேர இருந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

### அதிகாலை நேரத்தில்

பளுகஸ்வெவா – கல்லோயா ரயில் நிலையங்களுக்கிடையில் வெள்ளிக்கிழமை அதிகாலை இரண்டுமணி முப்பத்து ஐந்து நிமிடநேரத்தில் மேற்படிபயங்கர விபத்து ஏற்படவிருந்ததாம்.

பளுகஸ்வெய ரயில் நிலையத்தை விட்டுப் புறப்பட்ட ரயில் சில மைல் தூரம்சென்றதும், என்ஜின்பாதையைவிட்டு விலகி, முந்நூறு யார் தூரம் ஓடியதாகவும், ரயில் சாரதி திரு. கே. ஜே. ஈ. டி. சில்வாவின் சாதுரியத்திறல் ரயிலின் வேகம் குறைக்கப்பட்டு, விபத்து ஏற்படாமல்தவிர்க்கப்பட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

### தண்டவாள இணைப்புகள்

ஸ்தலத்தில் பொலிசாரும் புகையிரதப்பகுதி உயர் அதிகளும் விசாரணை நடத்தினர்

விசாரணையில், தண்டவாள இணைப்புத்தகடுகள் பல அகற்றப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இணைப்புத் தகடுகளைஅகற்ற உபயோகிக்கப்பட்ட சில ஆயுதங்களும் சம்பவம் நடைபெற்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டன.

ரயில்பாதையில் ஒரு இடத்தில் ஆயுதப்பெட்டி உடைக்கப்பட்டு சில ஆயுதங்கள் களவாடப்பட்டிருந்ததும் விசாரணையின் போது தெரியவந்தது. இந்த ஆயுதங்களைக் கொண்டே இணைப்புத்தகடுகள் அகற்றப்பட்டிருப்பதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

ரயில் பிரயாணிகளிடம் கொள்ளையடிக்கும் கையில் ரயில் கவிழ்ப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டதா அல்லது வேறு சதிநோக்கம் பின்னணியில் இருந்ததா என்பது குறித்து பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## வாடிவீட்டில் வைத்து இளைஞர் கைது

[யாழ்ப்பாணம்]

வவனியா வாடி வீட்டில் வைத்து இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இரகசியத் தகவலின் பேரில் மேற்படி வாடிவீட்டுக்குச் சென்ற ஆயுதப்படையினர், அந்த இளைஞரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளதாக தெரியவருகிறது.

## இஸ்ரேலிய தூதரகம் மூடப்படும்?

### தூதரக அதிகாரிகள் வெளியேற்றம்

புதுடில்லி. ஜூலை. 11

பம்பாயிலுள்ள இஸ்ரேலிய தூதரகத்தின் கவுன்சில் அதிகாரி திரு. யூசுப் ஹசன் அங்கிருந்து வெளியேறியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இவ்வதிகாரி மத்தியகிழக்கு பிரச்னை தொடர்பாக இந்தியா கடைப்பிடித்து வரும் கொள்கையைக் கண்டித்து பத்திரிகையொன்றிற்கு ஆட்சேபகரமான கருத்துக்களை தெரிவித்ததையடுத்து. இவரை அங்

(8-ம் பக்கம் பார்க்க)

நெல்லியடிச் சம்பவம்:

## பதினொரு வர்த்தகர்கள் விசாரணை செய்யப்பட்டனர்

[புலோலி – கரவெட்டி]

நெல்லியடி துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் தொடர்பாக நேற்று நெல்லியடியிலுள்ள பதினொரு வர்த்தகர்கள் விசாரணைக்குட்படுத்தப் பட்டனர்.

சம்பவம் நடைபெற்றஇடத்திற்குச்சமீபமாகவுள்ள 11வர்த்தகர்களே பொலிசாரினுல் விசாரணை செய்யப்பட்டனர்.

விசாரணையை தொடர்ந்து வர்த்தகர்களின் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

பொலிசார் இச்சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (க)

### இன்று மரணவிசாரணை

(புலோலி)

நெல்லியடியில் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியான 4பொலிசாரின் மரணவிசாரணை இன்று காலை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் நடைபெறும். (க)

### காயமடைந்த கடைஊழியர் சாட்சியம்

[புலோலி]

''சம்பவதினம்இரவு ஏழரை மணிபோல் எனது கடையில் பெயின்ற்ரின் அடுக்கிக் கொண்டிருந்தபோது திடீர் என்று என் பின் பக்கத்தில் தாக்கமேற்பட்டது''.

நெல்லியடி துப்பாக்கி சூட்டு சம்பவத்தின் போது காயமடைந்து சிகிச்சை பெற்று வரும் கடைச்சிப்பந்தியான ப.ஜெயசீலன், பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில்மேற்கண்டவாறு கூறினர்.

அந்த வாக்கு மூலத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது ''எங்கள் கடை வழமை போல் 6–30மணிக்கு மூடப்பட்டது. கடைக்கு சாமான்கள் வந்தபடியால் ஒற்றைக் கதவில் திறந்திருந்தோம். நான் உள்ளே நின்றபொழுது பின்பக்கத்தில் தாக்கம் ஏற்பட்டது. நான் விழுந்து குளறினேன். கடையிலுள்ள ஏனையோர் என்னை தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிசிச்சை பெறமுடியாது போனதால்

[8-ம் பக்கம் பார்க்க]

## இந்திய ஜனுதிபதி தேர்தல்: இன்று வாக்களிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் புதிய ஜனுதிபதியை தெரிவு செய்யும் பொருட்டு அந் நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்களும், சட்டசபை உறுப்பினர்களும் இன்று வாக்களிக்கவுள்ளனர்.

இந்தியாவின் பாராளுமன்ற உறுப்பினர்களும் 21 மாநிலங்களின் சட்டசபை உறுப்பினர்களும் இத்தேர்தலில் வாக்களிக்கதகுதியுடையவர்கள் என்றுதெரிவிக்கப்பட்டது,

இந்திய ஜனுதிபதி தேர்தல் முடிவு நான்குநாட்களின் பின்னரே வெளிவருமென்றும் கூறப்பட்டது,

ஜனுதிபதி தேர்தலுக்கு இந்திரா காங்கிரஸ் சார்பில் திரு. ஸெயில்சிங்கும், எதிர்க்கட்சிகளின் சார்பில் திரு.கன்னுவும் போட்டியிடுவது தெரிந்ததே. (வெ)

அரிய சந்தர்ப்பம்

**Computer Programming**

மீண்டும் ஒரு புதிய பயிற்சி வகுப்பு

ஆரம்பம்: 18-7-82

COBOL – BASIC – FORTRAN – R. P. G II

எமது நிறுவனத்தில் உள்ள Computer இல் ஒவ்வொரு மாணவற்கும் பயிற்சியளிக்கப்படும். O/L அல்லது N.C.G.E.படித்த இருபாலரும் சேரலாம்–நேரில் வரவும்.

நாஷனல் அக்கடமி,

மொம்சாக் கட்டிடம்,

11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

3847

# விளம்பரம்

## வாடகைக்கு

யாழ்நகரில் இலக்கம் 1/1, பலாலிவீதியிலுள்ள சகல வசதிகளுமுடைய வீடு ரூபா 500/- மாத வாடகையும் ஒரு வருட முற்பணத்துடனும் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு முகவரி: சிவசுப்பிரமணியம், 15, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (3842)

அளவெட்டி தெற்கு விநாயகர் ஆலய
சீட்டிழுப்பின் முடிவுகள்
1. 3312, 2. 1332
3. 885, 4. 3324,
5. 1426
(3843) தொண்டர்சபை

## கேள்வி விளம்பரம்

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை உப அலுவலகம், பண்டத்தரிப்பு பட்டணப் பொதுச் சந்தை மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீனசந்தையின் கீழ்மாடியிலிருக்கும் 14 கடைகளுள் இரு கடைகளைத் தவிர்ந்த ஏனைய 12 கடைகளும் 1-8-1982ம் திகதி தொடக்கம் வாடகைக்கு கொடுப்பதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 26-7-82 நண்பகல் 12-00மணி வரையும் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும். மேற்படி கேள்விகளுக்கான கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் யா/ அ. ச. உப அலுவலகம் பண்டத்தரிப்பு பட்டணசபையினால் 22-7-82 பி. ப. 2-00 மணிவரை கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/-யும் கேள்விப்பத்திரக் கிரயமாக ரூபா 25/-யும் செலுத்தும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும்.

மேற்படி கடைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரே தடவையில் செலுத்தவேண்டிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா 30 000/-க்கும் குறையக் கூடாது. மேலும், குறிப்பிட்ட கடைகள் ஒவ்வொன்றிற்கும் பிரதான விலை மதிப்பீட்டாளரால் நிர்ணயிக்கப்படும் மாதாந்த வாடகையுடன், ஒரே தடவையில் செலுத்தப்படவேண்டிய கூடுதலான கேள்வித் தொகையை யார் உரிய நேரத்தில் செலுத்துகின்றார்களோ அவர்களுக்கே, குறிப்பிட்ட 12 கடைகளில் ஒன்றைத் தெரிவு செய்யும் ''தெரிவுரிமை வழங்கப்பட்டு அவர் விரும்பிய கடையும் வழங்கப்படும்.''

கேள்விகள் பதிவுத்தபால் மூலம் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு, யாழ். அபிவிருத்திச் சபை செயலாளர் அவர்கட்கு மூலப்பிரதியை அனுப்பும் இதே வேளையில், இணைப் பிரதியை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், யா/ அ. ச உபஅலுவலகம், பண்டத்தரிப்பு பட்டணம் என முகவரியிட்டு அனுப்பப்படல் வேண்டும்.

மேலும் கேள்வி விளம்பரத்திற்கான நிபந்தனைகள், விபரங்கள் யாவும், யா/ அ. சபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

தேவநேசன் நேசையா,
யாழ். அபிவிருத்திச்சபை,
யாழ்ப்பாணம்.

யாழ். அபிவிருத்திச்சபை
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
8-7-1982.

3831

''சமுதாயப்

# பொறுப்புடைய பெண்கள் துணிவுடன் செயல்படவேண்டும்''

(மண்டைதீவு)

''மனிதனுக்கு அன்னையாகவும், மனைவியாகவும், குழந்தையாகவும் விளங்குபவள் தாய். அவளது அரவணைப்பிலேயே மனித சமுதாயம் வாழ்கிறது'' என்று யாழ் மாவட்ட மங்கையர் கழகத்தின் ஆதரவில் அல்லைப்பிட்டி குடும்ப சுகநல மகளிர் கழகத்தின் தையல் பயிற்சி நிலையத்தை அல்லைப்பிட்டி கிராம முன்னேற்ற சங்க மண்டபத்தில் மாவட்ட மங்கையர் கழக தலைவி திருமதி யோகேந்திரா துரைசுவாமி குறிப்பிட்டார்.

இப்பயிற்சி நிலையத் திறப்பு விழா வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. நாகராசா தலைமையில் நடைபெற்றது. திருமதி துரைசுவாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இன்று ஒரு செழுமையான பங்கினை வகிக்கும் காலகட்டத்தில் பெண் இருக்கின்றாள். அவள் சமுதாயத்தைப் பிறப்பித்து அதனைத் தாலாட்டிச் சீராட்டி வளர்ப்பதோடு நில்லாது அதனைக் கொண்டு நடத்த வேண்டியவளாகவும் இருக்கின்றாள் ஆகவே அவள் பொறுப்புணர்ச்சியுடனும் துணிவோடும் செயல்பட்டு கண்ணியம், கட்டுப்பாடு, கடமை ஆகியவற்றுக்கு அணிகலனாக விளங்கி சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டாகவாழ வேண்டும். பெண்களின் பெருமையையும் சமுதயாயத்தில் வகிக்கும் முக்கியத்துவத்தையும் நினைவு கூர்ந்து மகளிரதும் குடும்பத்தினதும் வாழ்க்கை தரத்தை, மேம்படுத்துவதற்காக உருவானதே இம் மாதர் கழகம். பெண்களின் அடிப்படை வாழ்க்கை முறையை அபிவிருத்திசெய்து தனிப்பட்ட குடும்பங்களின் பொருளாதார சமூக நிலைமையை உயர்த்தும்பொருட்டு

(7-ம் பக்கம் பார்க்க)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்

வட்டுக்கோட்டை அராலி தெற்கைச் சேர்ந்த அம்பலவாணர் செல்லத்துரை என்பவரின் மரணசாதனமில்லாத மரணச்சொத்துக்களினதும் உடமைப் பொருள்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவர்

மரணசாதன
நியாயாதிக்க இல ரி. 117

அம்பலவாணர் செல்லத்துரை கைம்பெண்நாச்சிப்பிள்ளை அல்லது சரஸ்வதி, கேணிக்கரை அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

மனுதார்

1. செல்லத்துரை சசிசேகரன்
2. செல்லத்துரை சசிசேயோன்
3. செல்லத்துரைசசிகயன்
4. செல்லத்துரை மகள் உமா
5. செல்லத்துரை மகள் உமை எல்லோரும் பராயமற்றவர்கள் தங்கள் பாதுகாவலர் 6ம் எதிர்வாதி மூலம் அளவெட்டி வடக்கு
6. அம்பலவாணர் தம்பிராசா பராயமற்ற 1-5ம் எதிர்மனுதார்களின் பாதுகாவலராக அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982ம்ஆண்டு ஆடிமாதம் 21ம் திகதி முற்பகல் 9மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1982ம் ஆண்டு ஆடி மாதம் 5ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
சு. வ. கணேசன்,
பதிவாளர்

தயாரித்தவர்:
க. குணரத்தினம்,
மனுதாரின் சட்டத்தரணி.

3824

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றத்தில்

ஏழாலை ஏழாலை வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் கந்தையா இராசையா என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

இராசையாகைப்பெண் வள்ளிப்பிள்ளை ஏழாலை வடக்கு, ஏழாலை.

மனுதார்

மரணசாதனநியாயாதிக்கம்
இல. 134

எதிராக

1. இராசையா மகள் இராசகுலதேவி
2. இராசையா ஜெயராசகுலசிங்கம்
3. இராசையா இராஜேஸ்வரன்
4. இராசையா மகள் கருணாதேவி
5. இராசையா மகள் தனபாக்கியம்
6. இராசையா மகள் கோகுலதேவி
7. இராசையா ஞானேஸ்வரன் எல்லோரும் ஏழாலைவடக்கு, ஏழாலை இவர்களுள் 7-ம் பேர் பராயமற்றவராய் இருப்பதால் இவரின் வழக்கு பாதுகாவலனாக நியமிக்கப்படவிருக்கும் 1-ம் எதிர் மனுதார் மூலம்

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1982ஆம் ஆண்டு ஆடி மாதம் 14ஆந் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
சு. வ. கணேசன்,
பதிவாளர்.

1982-ம் ஆண்டு வைகாசி மாதம் 28 ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னால் எழுதப்பட்டது:
செ. இராமலிங்கம்.
மனுதாரின் சட்டத்தரணி

[3838]

## வீடு தேவை

நியாயமான விலையில் யாழ் நகரில் வீடு ஒன்று தேவை. ரொக்கப்பணம் கொடுக்கப்படும்.

தொடர்பு:. யாழ். பிறப்பட்டி ரேட்ஸ்,
இல. 3, நவின சந்தை (மேல் மாடி),
யாழ்ப்பாணம்.

## கார் விற்பனவு

யாழ். பிறப்பட்டி ரேட்ஸ் ஸ்தாபனம் உங்கள் காரை Car, எங்களிடம் ஒப்படைத்து விற்க விரும்பினால் நியாயமான அட்வான்ஸ் கொடுக்கப்படும்.

தொடர்பு:- யாழ். பிறப்பட்டி ரேட்ஸ்,
இல. 3, நவீன சந்தை (மேல் மாடி)
யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

வல்லிபுர ஆழ்வார் சுவாமிகோவில் இராஜகோபுர நிதி சேர்ப்பதற்காக வருபவர்களில் உங்களுக்கு நம்பிக்கையற்ற நபர்களிடம் எந்தவித நிதி உதவியும் வழங்கவேண்டாம் என இத்தால் அறியத்தருகிறோம். நிதி உதவிசெய்ய விரும்புவோர் இலங்கை வங்கி கணக்கு இல. 5014இல் பணத்தைச் சேர்க்கலாம்.

வல்லிபுரம் தேவஸ்தானம்

3839

உ
ராம ஜெயம்

## நன்றி நவிலல்

04-7-82 அன்று சிவபதமடைந்த திரு. மூர்த்தி ஐயர் அவர்களது ஈமக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியோருக்கும், மலர் வளையம் சாத்தியோருக்கும், பலவகைகளிலும் உதவிகள் செய்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்தோடு மேலும் நடைபெறவிருக்கின்ற அன்னாரது கிரியைகளில் பங்குபற்றுமாறு அன்புடன்வேண்டுகின்றோம்.

### கிரியை விபரம்

துந்துபி-ஆனி 29 (13-7-82) செவ்வாய்
காலை 10 மணி (தசாகம்) (கல் எடுப்பு)
துந்துபி ஆனி 30 (14-7-82) புதன்-
ஏகோதிஷ்டம், மாசியம்
துந்துபி-ஆனி 31 (15-7-82) வியாழன்-
சபிண்டிகரணம்.
துந்துபி-ஆனி 32 (16-7-82) வெள்ளி
கிருகயக்ஞம் (சுத்த புண்ணிய வாகனம்)

இங்ஙனம்,
திருமதி மூர்த்தி ஐயரும், பிள்ளைகளும்

குமரன் அரிசி ஆலை,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

3844

## ஏல மலிவு விற்பனை

உங்களிடம் தேவையற்ற அல்லது தேவைக்கு அதிகமாக உள்ள பாவித்த அல்லது புதிய பொருட்களை பணமாக மாற்ற விரும்புகின்றீர்களா?

கீழ்க்கண்ட விலாசத்திற்கு பொருட்களின் பெயர்ப் பட்டியலை 21-07-1982க்கு முன் அனுப்பவும். அத்துடன் பொருட்களை 25-07-1982 மு. ப. 8-00 மணிக்கு முன் கொண்டு வரவும்.

Engineering Contracts and Syndicate Business Establishment,

சர்வ வியாபார, பொறியியல்
ஒப்பந்த வேலை ஸ்தாபனம்,
50, மகாத்மா வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

மேலும் விபரங்களுக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

[உங்களுக்குத் தேவையற்ற அல்லது தேவைக்கு அதிகமான பொருட்கள், பாவித்த அல்லது புதிய தளபாடங்கள், கட்டிட வேலைப் பொருட்கள், வானொலிப் பெட்டிகள், T. V., இன்னிசைக் கருவிகள், மின்சார கருவிகள், சமையல் அறை உபகரணங்கள், புத்தகங்கள், விளையாட்டுப் பொருட்கள், கார், மோட்டார் சைக்கிள், மற்றும்...காணி, வீடு...அனைத்தும் அடங்கும்

கட்டிட வேலைக் கஷ்டங்களா?

எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

3800

## தென் லெபனுனுக்கு:

# பிரான்ஸ்படைகள்!

# சண்டை தொடர்கிறது

பெய்ரூட், ஜூலை 11

தென் லெபனுனில் பாலஸ்தீனர்களுக்கும், இஸ்ரேலியப் படைகளுக்குமிடையே இடம் பெற்றுவரும் மோதலைத்தடுக்கும் வகையில் பிரான்ஸ் தனது படைகளை தென்லெபனுனுக்கு அனுப்பிவைக்க முன்வந்துள்ளது.

தென்லெபனுன் பிரான்ஸிடம் கேட்டுக்கொண்டதையடுத்தே பிரான்ஸ் படைகள் அங்கு செல்லவிருக்கின்றன.

பிரான்ஸ் ஜனுதிபதி திரு. மித்தரோன் இதற்கு அனுமதிவழங்கியுள்ளார்.

இது இவ்வாறிருக்க நேற்று முன் தினம் பெய்ரூட் சர்வதேச விமானநிலையத்துக்ககில் சண்டையொன்று இடம்பெற்றது. சாதாரண துப்பாக்கிகளைக் கொண்டுதாக்குதல்களை ஆரம்பித்த பாலஸ்தீனர்கள் அதற்குப்பதிலடியாகஇஸ்ரேலியர்கள் டாங்கிகளை இயக்கியதும், ராக்கெட்டுகளை ஏவி அத்தாக்குதலுக்கு ஈடுகொடுத்தனர்எனத்தெரிவிக்கப்பட்டது.

## ஐ. நா. விசேட மாநாடு ஒத்திவைப்பு

லண்டன், ஜூலை 11

கடந்த ஐந்து நாட்களாக நடைபெற்று வந்த ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் படைக்குறைப்பு, ஆயுதப்பரிகரணம் பற்றிய விசேட மாநாடு எதுவித முடிவையும் எடுக்காது நேற்று நள்ளிரவுடன் ஒத்திவைக்கப்பட்டது.

இம்மகாநாட்டில் நூற்றி ஐம்பத்தேழு நாடுகள் பங்கு பற்றின. இந்தியாவின் பிரதிநிதியான திரு. என். கிருஷ்ணன் ஆயுத உற்பத்தியையும், படைச் செலவினங்களையும் வல்லரசு நாடுகள் கூட்டிவருவதைக் கண்டித்தார். அத்துடன் இந்தியா எக்காலத்திலும்சமாதானத்துக்கே உழைத்துவரும் என்று அவர் கூறினுர். [கி]

## மன்னுர் மாவட்டம்:

## தேர்தலில் போட்டியிட சுதந்திரக் கட்சி சுறுசுறுப்பு

[மன்னுர்]

மன்னுர் மாவட்டத்தில் சிறி லங்கா சுதந்திரக்கட்சி [சிறிமா பிரிவு] கிளைகளை புனரமைத்து எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவென சட்டத்தரணி ஜனுப் ஐயூப், டாக்டர் ஜெரூபேர்ட் குரூஸ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

வவனியா சிறி லங்கா சுதந்திரக்கட்சி [சிறிமா பிரிவு] அமைப்பாளர் திரு. எம். நடராசாவின் இல்லத்தில் சிறி லங்கா சுதந்திரக்கட்சி பிரதித் தலைவர் திரு. கே. பி. இரத்நயக்கா தலைமையில் நடைபெற்ற வன்னி மாவட்ட சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களுக்கான கூட்டத்திலேயே இத் தெரிவு இடம்பெற்றது.

சட்டத்தரணி ஜனுப் ஐயூப், மன்னுர், சிலாவத்துறை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் டாக்டர் ஜெரூபேர்ட் குரூஸ் மாந்தை நானுட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கட்சிகிளைபுனரமைப்பு வேலைகளை மேற்கொள்வார்கள். (க)

## திருட்டு சைக்கிளுடன் சந்தேகநபர் கைது!

[மன்னுர்]

ஏற்கனவே களவு போனதாக பொலிசில் புகார் செய்யப்பட்ட சைக்கிளை வைத்திருந்த இருவர் பொலிசாரினுல் கைதுசெய்யப்பட்டனர்.

மன்னுர் தாழ்வுபாட்டைச் சேர்ந்த சிங்கராயர் துரம், சுசையப்பு குரூஸ் ஆகிய இருவருமே பொலிசாரினுல் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களாகும்.

ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த மன்னுர் பொலிஸ் இன்ஸ்பெகிடர் திரு. ஞானப்பிரகாசம், கான்ஸ்டபிள்கள் திரு. ஆர். எஸ், ஜெயபாலன், திரு. ஜெயவர்த்தன, திரு. விமலசிறி ஆகியோர் சைக்கிளில் சென்ற இருவரையும் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைக் குட்படுத்தப்பட்ட போது அவர்கள் வைத்திருந்த சைக்கிள் ஏற்கனவே திருடப்பட்டது தெரியவந்தது.

சந்தேகநபர்கள் இருவரும் மன்னுர் நீதவான் திரு. மடவெல முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். [க]

## பாக். சிறையிலிருக்கும் இந்தியக் கைதிகள்

### விரைவில் விடுதலை?

புதுடில்லி, ஜூலை 11

கடந்த எட்டுவருடங்களாக பாகிஸ்தானிய சிறைகளில் இருந்த பத்து இந்தியக்கைதிகள் அடுத்தமாதம் பத்தாம் திகதி விடுதலை செய்யப்படவுள்ளனர். இந்திய பாகிஸ்தானின் நல்லெண்ணப்பேச்சுவார்த்தைகளையடுத்தேபாகிஸ்தான் இப்பத்துக் கைதிகளையும் விடுதலையாக்க முன்வந்தது.

1971-ம்ஆண்டு நடைபெற்ற பாகிஸ்தான் இந்தியப்போரில் நாற்பது பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட முந்நூறு இந்தியப் பிரஜைகள் காணுமல்போயிருந்தனர் என அறிவிக்கப்பட்டது. அவர்களும் பாகிஸ்தானில் கைதிகளாக விருப்பதரகவும், விரைவில் அவர்கள் விடுதலைக்குள்ளாவார்களென்றும் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாகிஸ்தானில் இருக்கும் இந்தியக் கைதிகளைப் பார்வையிட இந்திய அதிகாரிகளுக்கு அனுமதியும் வழங்கப்பட்டிருக்கின்றது.

## தமிழ் நாட்டில் ஒரு பெண் பொலிஸ் நிலையம்!

சென்னை, ஜூலை 11

முற்றிலும் பெண் பொலிஸாராலேயே நிருவகிக்கப்படும் பொலிஸ் நிலையமொன்று தமிழ்நாட்டின் திருநெல்வேலிப் பகுதியில் அமைக்கப்படவிருக்கின்றது

இந் நிலையம் சப்இன்ஸ்பெக்டர் ஒருவரின் பொறுப்பில் தலைமைக் கான்ஸ்டபிள் ஒருவரையும், ஏனைய பத்து கான்ஸ்டபிள்களையும் கொண்டு இயங்கவிருக்கின்றது.

இப்பதவிகளை வகிக்கவிருக்கும் சகலரும் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [கி]

## மகாவலிக்கு 66கோடி 70லட்சம் டாலர் உதவி

(கொழும்பு)

மகாவலி அபிவிருத்தித்திட்டத்திற்கென இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகள் குழு 66 கோடி 70லட்சம் டாலரை உதவியாக வழங்கவுள்ளது. [வெ]

## தியாகோ கார்ஷியா:

## மொரீஷியஸ் பிரதமர் உரிமை கோருகிறுர்

லண்டன் ஜூலை 11

தியாகோகார்ஷியா தீவை மொரீஷியஸும் உரிமை கொண்டாடமுன்வந்துள்ளது.

'மொரீஷியஸ், தியாகோகார்ஷியா ஆகியன பிரிட்டனில் ஒன்றுக நிருவகிக்கப்பட்டவையாகும். பின்னர் மொரீஷியஸ் சுதந்திரமடைந்ததும் தியோகோகார்ஷியாவிடமிருந்து அதுபிரிக்கப்பட்டது. தற்போதும் தியாகோகார்ஷியா பிரிட்டனின் காலனித்துவத்தீவாகவே இருந்து வருகின்றது. இதனை அமெரிக்க கடற்படை தனது தளமாக பிரிட்டனிடமிருந்து குத்தகைகுப் பெற்றிருக்கின்றதென்பதும் குறிப்பிடத்தக்கது.

'மொரீஷியஸ்' தீவில் வாழும் பெரும்பான்மையான மக்கள் தென் இந்திய வம்சாவளியினராகவே இருக்கின்றனர். இந்து மதச்செல்வாக்கு அங்கு கணிசமாகக் காணப்படுகின்றது மக்களின் பெயர்களும் தமிழ்ப்பெயர்களாகவே இருக்கின்றன. ஆங்கிலம் பிரெஞ்சு என்பனவும் உத்தியோகபூர்வ மொழியாக விருக்கின்றன.

மொரீஷியஸ்தீவு பிரதமர் இதுபற்றி கருத்துத்தெரிவிக்கையில் தியாகோகார்ஷியா தீவு மொரீஷியஸீடன் சேர வேண்டும் என்று கூறியுள்ளார். (கி)

# தாயகம் திரும்பும் இந்தியர்: நிதி உதவி அதிகரிப்பு

சென்னை, ஜூலை 11

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தென்இந்தியாவுக்கு வரும் இலங்கை மலையகத் தொழிலாளர்களுக்கு, அவர்களுக்கான வீடுகளைக் கட்டிக் கொள்ள மத்திய அரசினுல் நிதியுதவி வழங்கப்படவிருக்கின்றது.

கிராமப்பகுதிகளில் வீடு கட்ட விரும்புவோருக்கு மூவாயிரம் ரூபாயிலிருந்து நாலாயிரம் ரூபாவரையிலான நிதியும், நகரப்புறங்களில் குடியிருக்கவிரும்புவோருக்கு ஆறுயிரம்ரூபாவிலிருந்து எண்ணுயிரம் ரூபாவரையிலான உதவியும் வழங்கப்பட விருக்கின்றன. [கி]

## குடிபெயர்ந்துவந்த

## மலையக மக்களுக்கு உதவிகள் கிடைக்கவில்லை"

[கிளிநொச்சி]

கடந்த காலங்களில் ஏற்பட்ட இனக்கலவரங்களின் போது குடிபெயர்ந்து வந்த மலையக மக்கள் போதிய பாதுகாப்பின்றி வாழ்கின்றனர். இவர்களிற்கு அரசின் எந்த உதவியும் இதுவரைகிடைக்கவில்லை.''

மக்கள் விடுதலை முன்னணியின் வடபிரதேச அமைப்பாளர் திரு. பா. கணேசபிள்ளை முருகண்டி பொன்நகர் கிராம முன்னேற்றச்சங்க வருடாந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கிளிநொச்சி கிராம சேவையாளர் திரு.கே மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. கணேசபிள்ளை மேலும் பேசுகையில் கூறியதாவது; இப் பகுதியில் இதுவரை முப்பதுக்கு மேற்பட்ட மக்கள் யானையால் தாக்குண்டு மரணமாகியுள்ளார்கள். இவர்களிற்கான பாதுகாப்போ நஷ்ட ஈடோ வழங்க அரசு முன்வரவில்லை. இச்செயல் அரசின் மாற்றுந்தாய் மனப்பான்மையையே காட்டுகிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கிளிநொச்சி மாவட்டத் தலைவர் திரு.எஸ். செல்வபதி, திரு. மைக்கல் ஜோசப் ஆகியோரும் பேசினுர்கள். (க)

# பக்கிங்ஹாம் அரண்மனையில் திருட முயன்றவர் கைது!

லண்டன் ஜூலை 11

பிரிட்டிஷ் அரச குடும்பத்தவரின் உத்தியோக பூர்வவாசஸ்தலமானபக்கிங்ஹம்அரண்மனையில் திருடமுயன்றதாகக் கூறப்படும் ஒருவர் பொலிஸாரினுல் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரண்மனையில் எலிஸபெத் மகாராணியாரின் படுக்கையறைக்கு இருநூறு யார் தொலைவில் சந்தேக நபர் நடமாடியதை அரண்மனை ஊழியர் ஒருவர் கண்டு பொலிஸாரிடம் அறிவித்ததைத்தொடர்ந்து பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

அவரிடம் பயங்கரஆயுதங்கள் எதுவும் காணபடவில்லை என்றம் அவர் அரசியல் நோக்கம் கொண்டவர் அல்லவென்றும் பொலீஸார் தெரிவித்தனர் சந்தேகநபர் ஒரு ஆங்கிலேயராவார்.

பக்கிங் ஹாம் மாளிகையைப் பார்வையிட வரும் மக்கள் அங்குள்ள தீவிரகாவலையும் மீறிமாளிகை வளவினுள் சிலவேளைகளில் பிரவேசித்திருக்கின்றனர். ஆனுல் இவ்வாறு மாளிகையினுள் நடமாடியது இதுவரை கிடையாதென்று பொலிஸார் அறிவித்தனர்.

அரண்மனையினுள்நடமாடிய சந்தேகநபர் மீது திருட முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு அவர் நீதிமன்றில் நிறுத்தப்படுவாரெனத் தெரிவிக்கப்பட்டது. (கி)

### மணிவாக்கு

தாமே, நான் பெரியவன், அவர்கள் தாழ்ந்தவர் போன்ற கருத்துக்களையெல்லாம் என்னிடத்து இல்லாது அழித்து விடுவாயாக? ஏனெனில் தாழ்ந்தவர் எனப்படும் அவர்களும் பல்வேறு ரூபங்களில் உள்ள நீயே அன்றி வேறு யாவர்?

— ஸ்ரீராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

# அகில உலகில் ஐந்தில் ஒன்று

நூறு கோடி மக்கள் வாழும் நவசீனாவில் குடிசன மதிப் பெடுக்கபபடுகின்றது. இன்று மொத்தத்தின்முடிவு வெளியிடப்படுமெனசெய்தி கூறுகின்றது.

சனத்தொகையில் உலகில் முதலிடம்; நிலப்பரப்பிலும் மிகப்பெரியது; 37 லட்சம் சதுர மைலில் வாழும் நூறு கோடி மக்கள் கொண்ட சீனா உலக ஜனத்தொகையில் ஐந்தில் ஒன்று பங்குக்கு சற்றே அதிகமாகக் கருதப் படுகிறது.

சீனப் புரட்சியின் தந்தையான காலஞ்சென்ற மாசேதுங் அவர்கள் ஜனத்தொ தொகை அதிகரிப்பைக் கண்டு அஞ்சவில்லை. உலகைப்படைத்து, காத்து அழிக்கும் ஆடுந்தெய்வமாகிய நடராஜனைப்போல் நிரந்தர புரட்சியில் நம்பியிருந்த மாசேதுங் மனிதப் பிறவியைக் கட்டுப்படுத்தும் தத்துவத்தை மறுத்தவர்.

மாவோ என்பது 'ஓம்' என்னும் பிரணவத்தைப் புரட்டி விடுவதால் வரும் ஓசையென்று ஒரு அறிஞர் ஹாஸ்யமாகச் சொல்வதுண்டு. தில்லையில் நடம்புரியும் கூத்தபிரானின் ஆட்டம்என்றும் முடிவடைவதில்லை, உலகில் உயிர்கள் இன்புற்று வாழ அந்த ஆட்டம் அவசியம். ஆனல் மக்கள் வாழ்வு என்றும் புரட்சி வாழ்வாகவிருப்பதை இன்றைய சீனத் தலைவர்கள் விரும்பவில்லை.

சீனப் புரட்சி உலகின் அற்புதங்களில் ஒன்று; அதன் பலாபலனை மக்கள் அநுபவிப்பதற்கு அமைதியுற்ற சமுதாயம் வேண்டும். அதன் முக்கிய தேவையாகவே இன்று இந்த குடிஜன மதிப்பு மேற்கொள்ளபபடுகிறது.

வேற்று நாடுகளில் நடைபெறும் நிகழ்ச்சி போன்றதல்ல இது; இதுவும் ஒரு அதிசய சாதனையாக முடிவடைய சான்றுகள் உண்டு.

கம்பியூற்றர் சாதனத்தில் வேகமாக கணிக்கப்படும் புள்ளி விபரங்கள் மிகக் கண்டிப்பாகவும் பயபக்தியுடனும் சேகரிக்சப்படுகின்றன.

சாதாரணமாகத் 'தலையெண்ணுதல்' என்றே இது சொல்லபபடும். சீனாவில் இதனை 'வாயெண்ணுதல்' என்று குறிப்பிடப்படுகிறது. குடிஜனத்துக்கு உணவே பிரதானமென்பதை இது சுட்டுகின்றது.

எங்கள் நாட்டில் பரம்பரை பரம்பரையாக எத்தனை மக்கள் கஞ்சிக்கு வழியில்லாமல் பிறந்துவளர்ந்து மடிந்திருக்கிறார்கள் என்று சொல்வதற்கு ஆவணம்ஏதுமுண்டா? உணவில்லாமல் உயிர் துடிக்கும் மக்களைப் பற்றி அரசு ஆதாரமுற்ற விபரங்கள்சேகரித்திருக்கின்றதா? இந்த வேறுபாட்டை சீன விவகாரங்கள் விளக்குகின்றன.

சீனாவின் முன்மாதிரி உலகுக்கே உரியது. இந்த மதிப்பெடுப்பிற்கு இருபது கோடிக்கு மேற்பட்டவர் உத்தேச செலவு; கடந்த இரு வாரங்கள் நடைபெற்ற மதிப்பீட்டிற்கு மூன்று வருடகாலம் ஆயத்த ஒழுங்குகள் செய்யப்பட்டன; 57 லட்சம் தொழிலாளர்கள் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர்: சீனாவின் பெருஞ் சுவரைக் கட்டி எழுப்பிய வேலையாட்கள் தொகையில் 2 மடங்கு மேலதிகமான தொகை இது.

வீட்டுக்கு வீடு செல்லும் பணியில் ஓய்வுபெற்ற பெரியோர், இல்லக்கிளத்திகள், இப்பணிக்குப் புதியவரானவர்களுக்கு உதவி புரியமுன்வந்திருக்கின்றனர்.

மக்களுக்கு – எல்லோருக்கும்– உணவு, வீடு, வேலையென்ற அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நோக்கே அரசுக்குப் பிரதானமானது; வெறும் பிரசாரமல்ல; நோக்கு நிறைவேற்றப்படும்.

ஏகாதிபத்திய காலத்தில் இவ்வித கணக்கெடுப்பை மக்கள் சந்தேகக் கண்ணுடன் பார்த்தார்கள்; உண்மை விபரங்களை ஒழித்தனர்.

இன்று நிலைமை வேறு; இருப்பினும் கம்யூனிஸ்ற் தத்துவத்தில் வரையறுக்கப்பட்ட கொள்கைகள் அவற்றின் கண்டிப்பான நடவடிக்கைகளிலிருந்து தட்புவது கடினம்; இருந்தும் இதற்குப் பிறநடைகளும் உண்டு.

நகரில் வாழ்பவர் 'நாமிருவர் எமக்கிருவர்' என்று சொல்லமுடியாது; 'எமக்கொருவர்' என்பது சட்டம்; இதனை மீறுபவர் தப்புவதற்குப் பிறப்பு விபரங்களை ஒழிப்பதுண்டு. ஜனநெருக்கம் நகரங்களை அதிகம் தாக்கியிருக்கிறது; விவாகமானவர்கள் ஒன்றாய் வாழ வீட்டு வசதி கிட்டாது; இறக்கும்போதும் நிம்மதியில்லை; எங்களைப் போல் தகனம் செய்யும் வழக்கம் தவிர்க்கமுடியாததாகிறது.

இந்தச் சூழ்நிலையில் திட்டமிடுதல் எவ்வளவு பொறுப்புவாய்ந்தது என்பதை இந்நாட்டு மக்கள் உணர்வது கடினம்; தினமும் சீனாவில் 40,000 சராசரி பிறப்பு; 16,000 சராசரி இறப்பு; இந்நூற்றாண்டு முடிவில் சனத்தொகை 30 கோடி அதிகரிக்கும் எனக் கணிக்கப்படுகிறது. இத்தொகை ஐக்கிய அமெரிக்காவின் இன்றைய ஜனத்தொகையிலும் பார்க்க அதிகமானது.

பலத்த தீவிரமான திட்டமிடுதலை அமுலாக்குவதில் புகழ்பெற்ற சீன அரசு, ஜனத்தொகையைத் தகுந்த வழியில் கட்டுப்படுத்தும்; அதுமட்டுமல்ல உலகின் மிகப்பெரிய மக்கள் கூட்டத்தை சரீர உழைப்பில் ஈடுபடுத்தி வறுமைக்கு வழிவிடாமல், தேசிய ரீதியில் வளமை – பிரச்னையில்லாத வளமைக்கு வழிவகுக்குமெனலாம்.

# "அடியார்கள் வாழ்த்தப்படுவதுகண்டு இறைவன் ஆனந்தமடைகின்றான்"

## மணிவிழாவில் கி. வா. ஜ.

[யாழ்ப்பாணம்]

''தாம் வாழ்த்தப்படுவதை விட தமது குழந்தைகள் வாழ்த்தப்படுவதைக் கண்டுபெற்றோர்கள் ஆனந்தமடைவது போலவே, இறைவனும் தனது அடியார்கள் வாழ்த்தப்படுவதைக் கண்டு ஆனந்தமடைகின்றான். ஆசையினாலேயே இறைவனைப் புகழ்ந்து பாடிய புராணம் சிறிய புராணமென்றும், அடியார்கள் மீது பாடப்பட்ட புராணம் பெரிய புராணமென்றும் அழைக்கப்படுகின்றது.''

இவ்வாறு ''கலைமகள்'' சஞ்சிகையின் ஆசிரியரும் தமிழறிஞருமான திரு. கி. வா. ஜகந்நாதன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களின் மணிவிழா வைபவத்தில்கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற மணிவிழா வைபவத்தில் கல்விமான்கள் பலரும், பேராசிரியர் கைலாசநாதக் குருக்களின் மாணவர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர். பேராசிரியர் க.இந்திரபாலா, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சட்டத்தரணி திரு நமசிவப்பிரகாச ஆகியோரும் சிறப்புரையாற்றினர்க்ள். அறிஞர் கி. வா. ஜகந்நாதன் மேலும் பேசுகையில கூறியதாவது:–

''இன்று விஞ்ஞான அறிவு வியாபித்திருக்கின்ற காரணத்தால் சிலர் நமது சமயத்தத்துவங்களை ஏளனஞ்செய்யமுயலுகின்றனர் என்னைச் சந்தித்த அன்பரொருவர் பூமியிலிருந்து பல மைல்கள் தொலைவில் இருக்கின்ற கிரகங்களைப் பார்வையிடும் தொலைநோக்கியைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். இதற்கு முன்னால் உங்கள் சமயத் தத்துவங்கள் எப்மாத்திரம் என்றார். நான் அந்த அன்பரிடம், தொலைநோக்கியின் சக்தி அபாரமானதுதான் ஆயினும் அந்தத் தொலைநோக்கியூடாக கிரகங்களைப் பார்வையிட இருபெரும் சக்திவாய்ந்த 'லென்சு'கள் முகத்திலிருக்கின்றனவே, அதைப் படைத்தவனின் சக்தியைட்பற்றி என்ன கூறுகின்றீர்? எனக்கேட்டேன். அதற்கு அவர் ஆமாம் நீங்கள் கூறுவது சரிதான் என்றார்.

''இன்னுமொருவர், பெருந் தொந்தியுடனும், யானைமுகத்துடனுமிருக்கும் விநாயகர் ஒரு சிறு பெருச்சாளியைத் தனது வாகனமாகக்கொண்டிருக்கிறாரே இது பொருந்தக் கூடியதொன்றா? இத்தகைய பெரும் உருவத்தையுடையவர் யானை மீது அமர்ந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்குமென்றார். நான் அந்த அன்பரிடம், விண்வெளிக்குச் செல்வோர், பூமியின் புவியீர்ப்புச் சக்தியைக் கடந்த பின்னர் அண்டவெளியென்று ஒன்றிருக்கின்றது. அங்கே சஞ்சரிக்கும்போது தமது உடல், தாம் கொண்டு செல்லும் கருவிகள் என்பன முற்றிலும் சுமையில்லாது அந்தரத்தில் நிற்கும் சூழ்நிலை இருக்கின்றதெனச்சொல்கிறார்கள். எனவே சகல சோள்கள் சக்திகள் யாவற்றிற்கும் அப்பாற்பட்டதென வர்ணிக்கப்படும் ஒரு வடிவத்துக்கு எவ்வாறு பாரம் இருக்கமுடியும் எனக் கூறி அவரது ஐயத்தைத் தெளிவுபடுத்தினேன்.

'இன்று இவ்விழா நாயகராக விளங்கும் பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா கைலாசநாதக் குருக்கள் சைவ சமய அனுட்டானங்களை நெறிதவறாது கடைப்பிடிப்பவர். இவரது மணிவிழா வைபவத்தில் பங்கு பற்றச் சந்தர்ப்பம் கிடைத்தமை பெரும் பேறெனக் கருதுகிறேன்'' என்றார்.

பேராசிரியர் கைலாசநாதக் குருக்களைப் பாராட்டி திரு. திரு. கி. வா. ஜகந்நாதன் பொன்னாடை போர்த்தினார். டண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் ஆகியோரது வாழ்த்துப் பத்திரங்களும் வாசித்துக் கையளிக்கப்பட்டன. பேராசிரியரின் மாணக்கர்களும் வாழ்த்துப் பத்திரம் ஒன்றைக் கையளித்தனர். (கி)

# "பக்திநெறியில் இலங்கைத் தமிழர் சிறந்து விளங்குகின்றனர்!"

## பால்வண்ணனார் கருத்து

[யாழ்ப்பாணம்]

''ஆலயங்களில் நமது தமிழ் நாயன்மார்கள் ஆழ்வார்கள் இயற்றிய பாடல்களையே வழிபாடுகளில் பயன்படுத்த வேண்டும் அவ்வாறே தமிழில் அர்ச்சனை செய்வதும் தமிழிற்கு சிறப்புத் தருவதாகும். தமிழகத்தைவிட இலங்கைத் தமிழர்கள் பக்திநெறியில் சமயப்பணிகளில் சிறந்து விளங்குகிறார்கள். எனினும இலங்கை அன்பர்கள் புற வழிபாட்டில் செலுத்தும் அக்கறையிலிருந்து வளர்ந்து அகவழிபாட்டில் ஈடுபாடு கொண்டால் சிறப்புடையதாகும்.''

இவ்வாறு தமிழகத்திலிருந்து ஈழத்துக்கு விஜயம் செய்துள்ள சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் ஸ்தாபகரும் தலைவருமான திரு. டி. பால்வண்ணனார் 'ஈழநாடு' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இருபதாண்டுகளாக தமிழகத்தில் தொடர்ந்து வெளிவரும் ''சுத்தசன்மார்க்கம்'' எனும் மாத பக்தி இதழின் ஆசிரியர் தொடர்ந்து தமது பேட்டியில் தெரிவித்ததாவது:

### சன்மார்க்க நெறிகளைபரப்ப

''அகில உலக சகோதரத்துவம் ஆன்மநேய ஒருமைப்பாடு ஜீவகாருண்யநெறி மரணமில்லாப் பெருவாழ்வு ஏக தெய்வ வழிபாடு என்கின்ற அருட் பெருந்திரு வள்ளலாரின் சன்மார்க்க நெறிகளை உலகெங்கும் பரப்பும் தமது நோக்கினை நிறைவேற்ற இலங்கை வந்துள்ளேன். தமிழகம் மீள்வதற்கு முன்பு கொழும்பில் வள்ளலார் நூல் நிலையம் ஒன்றை ஏற்படுத்திவிட்டு செல்லவிருக்கிறேன்.

### முதல்விஜயம்

''ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் உரிமையுளராகி உலகியல் நடத்திட வேண்டும். ''இச்சாதி சங்கற்பவிகற்பங்கள் எல்லாம் தவிர்த்தே எவ்வுலகும் சன்மார்க்கம் பொதுவடைதல் வேண்டும்'' என்கிற வள்ளலாரின் நெறிகளை தாம் மலேசியா, இந்தோனேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகட்கு சென்று பரப்பியுள்ளதாயும் தனது இலங்கை விஜயம் இதுவே முதல் தடவை. ''திருக்குறள் சிறப்புரை'' 'திருவிளக்கு' 'தாமரை' 'ஞானபூமி' ஞான சமய விளக்கம்'' அருட்பெருஞ்சோதி மகா மந்திரவிளக்கம்' என்பன உட்பட இதுவரை 300 சன்மார்க்க நெறிகூறும் நூல்களை வெளியிட்டுள்ளேன்'' என்றும் தெரிவித்தார்.

ஸ்ரீ பால சிவசர்வதேசசமாதான ஸ்தாபனத்தின் யாழ். கிளைச்செயலாளர் திரு. எஸ். ஜ. தனபாலசிங்கத்தின் அழைப்பின் பேரில் பாவலர் பால்வண்ணனார் யாழ், வந்துள்ளார். கொழும்பு ஜிந்துப்பிட்டி ஆலயத்தில் தொடர்ந்து 10 நாட்கள் சன்மார்க்க விரிவுரை நிகழ்த்திய பால்வண்ணனார் யாழ்ப்பாணத்தில் ஒருவாரம் தங்கவுள்ளார்.

திவ்விய ஜீவன சங்கம நல்லை ஆதீனம் ஆகியவற்றில் இவரது விரிவுரைகளை தாம் ஏற்பாடு செய்தபோதும் தற்போதுயாழ்ப்பாணத்தில் மாலை நேரங்களில் இவற்றை நடத்துவது சாத்தியமில்லாத நிலை இருப்பதால் விரிவுரைகள் ஒத்திவைக்கப்பட்டனஎன்று திரு. தனபாலசிங்கம் தெரிவித்தார். [சி]

# முழங்காவில் செல்லக் கதிர்காம நிர்மாணம்

முழங்காவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த பொ. பேரம்பலவாணர்சுவ மிகள் எழுதுகிறார்:

யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்குச் செல்வோர் முழுங்காவில் மார்க்கமாகச் செல்வதனால், கதிர்காம முருகன் மனம் வைத்து இந்த ஸ்ரீமுருகன் தேவஸ்தான ஆலய நிர்மாணத்தை மேற்கொள்ள என்னைத் தூண்டியுள்ளார். அவரது கட்டளைப்படி வயோதிப நேரத்தில் இத்திருப்பணியைத் தொடங்கியுள்ளேன்.

முற்காலத்தில் காஞ்சிப் பல்லவ அரசர் வடஇலங்கையில் வந்து பல்லவராயன் கட்டை இராசதானியாக்கித் தமிழர்களைக் கொண்டு வந்து குடியேற்றினார்கள். அவர்களிற் சிலர் அவ்விடத்திற்குத்தெற்கே நான்குமைல் தூரமுள்ளஇடத்தில் தோட்டம் செய்துவந்தார்கள். அவ்விடத்தில் தம்மால் தாபிக்கப்பட்ட விநாயகரைப்பூசிப்பதற்காக 27 முழ ஆழமாக ஓர் கிணறு வெட்டியும் நீர்காணப்படாததால் விநாயகப்பெருமானைக் குறையிரந்து தூங்கினர். அன்றிரவு மின்னாது முழங்காது இடியாது ஓர் சன்னம்பாய்ந்துகிணறுள் சென்றது. விநாயகப் பெருமான் அக்கிணற்றிற்குரிய பெரியவரிடம் கனவில் வெளிப்பட்டு 'அன்பனே' கிணற்றில் நீர் இருக்கின்றது. நீசென்று நீர்எடுத்துப் பூசை செய்யலாம் என்றனர். கனவின் காரணத்தால் நித்திரைவிட்டெழுந்து

(5–ம் பக்கம் பார்க்க)

# றமழான் சிந்தனை

''எவர் ஈமான் கொண்டு நன்மையைத் தேடி றமழான் மாதத்தில் நோன்பு வைக்கின்றாரோ அவருக்கு முன் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

ஸஹர் முடிவு 4–25
நோன்புதிறக்கும் நேரம் 6–31
தொகுப்பு: சுல்பிக்கா–கௌது

# "சாதியமைப்பு ஒழியும்வரை குரல் கொடுபபோம்"

[புலோலி]

''சம உரிமையை வேண்டி நிற்கின்ற எமது தமிழினத்தை நிரந்தரமாக விலங்கிட்டுவைத்திருக்கின்ற சாதியமைப்பு முறையும், தீண்டாமையும் தகர்த்தெறியப்படும்வரை சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி குரல்கொடுத்துக் கொண்டேயிருக்கும்.''

இவ்வாறு சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் விசேட புனரமைப்புப்பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய பொதுச்செயலாளர் சட்டத்தரணி எம். சிவகுருநாதன் குறிப்பிட்டார். அச்சுவேலி லிபேர்ட்டித்தியேட்டர் மண்டப அருகாமையில் ஆசிரியர் திரு மு. வடிவேலன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய திரு.சிவகுருநாதன் குறிப்பிட்டதாவது.

தமிழ் பகுதியின் சாதியமைப்பும் தீண்டாமையும் கிராமமக்களின் கூலி, விவசாயத்தொழி கள் போன்றனவற்றடன்தான் பின்னிப்பிணைந்துள்ளன. சமஉரிமைகளை வேண்டிநிற்கும் எமது மக்கள் மத்தியில் தற்போது ஒரு சிறு மத்திய தரவர்க்கம் உருவாகிவருகின்றது. அவ்வர்க்கத்திற்குத் தீண்டாமையினால் ஏற்படுகின்ற அனர்த்தனங்கள் குறைவாக இருப்பதனால் அவர்கள் சாதிக்குறைபாடும், தீண்டாமையும் அழிந்து விட்டதாகக் கருதுகின்றார்கள். தமிழர்விடுதலைக் கூட்டணி போதிய பிரதிநிதித்துவத்தை எமது மக்களுக்குத் தந்தால்போதுமென்று அவர்கள் கருதுகின்றார்கள்.

எமதுமக்களில் 90% மானோரின்பிரச்சினை சாதிதீண்டாமை ஆகியனவற்றுடன் ஒன்றுகலந்த வர்க்கப்பிரச்சினையாகும் அடிப்படையில் அவர்கள் உழைக்கும் வர்கத்தைச் சேர்ந்தவர்கள். தமிழர்விடுதலைக்கூட்டணியை உழைக்கும் வர்க்கத்தின் பிரதிநிதியாகக்கருத முடியாது அதன் தலைவர்கள் சகலரும் முதலாளித்துவத்தினதும் ஏகாதிபத்தியத்னதும் அடிவருடிகளேயாவர். அத்தகையவர்கள் உழைக்கும்வர்க்கமான தாழ்த்தப்பட்ட தமிழ்மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளமாட்டார்கள்.

# ஆசிரியையின் வீட்டில் முகமூடிக் கொள்ளை!

(சாவகச்சேரி)

முகமூடி அணிந்த இருந்த இருவர் வீட்டுக்குள் புகுந்து அங்கிருந்த ஆசிரியையும் அவரது பிள்ளைகளையும் கத்திமுனையில் பயமுறுத்தி அலுமாரிச் சாவியைப் பெற்று அலுமாரிக்குள்ளிருந்த நகைகளையும் பணத்தையும் யும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சாவகச்சேரி டச் வீதி இந்துக்கல்லூரி ஒழுங்கைகைச் சேர்ந்த ஆசிரியை திருமதி பாலசுந்தரம் இராசபூபதி என்பவரின் வீட்டிலேயே இக்கொள்ளை இடம்பெற்றது.

இச்சம்பவத்தின்போது கொள்ளையர்களில் ஒருவர் முகமூடி கழன்று கீழே விழுந்ததென்றும் ஆசிரியை ஒருவரை அடையாளம் காணக்கூடியதாக இருந்ததென்றும் தெரிவிக்கப்பட்டது,

சாவகச்சேரிப் பொலிசார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

## "கட்சி வேறுபாடுகளை மறந்து

# சேவை மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும்"

[புலோலி]

'கட்சிவேறுபாடுகளை மறந்து சேவை மனப்பான்மையுடன் நாம் செயற்படும்போதுதான் எமது பகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேம்பாடடைய முடியும். பருத்தித்துறை நகரின் புனரமைப்புக்கு இக்கிராமோதய சபை ஒரு அடிக்கல்லாக அமையவேண்டும்.''

இவ்வாறு பருத்தித்துறை நகரின் கிராமோதய சபைத் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட பருத்தித்துறை வர்த்தகர் சங்கத் தலைவரும் நகரசபை உறுப்பினருமான திரு. எம். பி. வீரவாகு [ஜே.பி] தலைவர் பதவியை ஏற்று உரையாற்றுகையில் குறிப்பிட்டார்,

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் விசேடசேவை அதிகாரி திரு. சிவராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய திரு. வீரவாகு குறிப்பிட்டதாவது:

''கட்சிவேறுபாடுகளற்ற முறையில் பொதுநோக்குடன் என்னை இக்கிராமோதைய சபையின் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்தமை கு இச்சபையின் அங்கத்தவர்கள் அனைவருக்கும்நான்நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பருத்தித்துறை,1941 ம் 42ம் ஆண்டுகளில் என்னநிலையில் இருந்ததோ, அதே நிலையில் தான் இன்றும் இருக்கின்றது. எங்கள் மத்தியில் உள்ள கட்சிப் பூசல்களினாலேயே இந்நிலை இருக்கின்றது. கிரோமோதய சபைகள் முலம் அமைகின்ற பிரதேசசபைக்கு இப்பகுதிகளின் அபிவிருத்திகளில்பாரிய பொறுப்புகள் இருப்பதனால் இக்கிராமோத சபைகளுக்குப் பொறுப்பும், ஆற்றலும் உள்ள தலைவர்களைத் தெரிவு செய்யவேண்டியது எமது சிறட்பான கடமையாகும். பருத்தித்துறை நகரின் புனரமைப்புக்கு இக்கிராமோதைய சபை ஒரு அடிக்கலாகஅமைய வேண்டும்.

## நியமனம்



யாழ்ப்பாண மாவட்ட சமாதான நீதவானாகவும், உத்தியோகப் பற்றற்ற நீதவானாகவும் சட்டத்தரணி திரு. செல்லப்பா அம்பிகைபாலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி, மட்டுவில் தெற்கைச் சேர்ந்த திரு அம்பிகைபாலன் கிளிநொச்சி நீதவான் திரு. வி. ஜெகசோதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்ட நீதிமன்றத் திறப்புவிழா முடிந்ததும், திரு. அம்பிகைபாலனின் சத்தியப் பிரமாண வைபவம் நடைபெற்றது.

மட்டுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும். சாவகந்சேரி டிறீபேக் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியிலும் கல்வி கற்ற பழைய மாணவர் திரு. அம்பிகைபாலன் தமிழிலும், ஆங்கிலத்திலும் பேச்சுத் திறமையில் அநேகமான தங்கப் பதங்கங்களைப் பெற்றுள்ளார்.

இவர் சட்டக்கல்லூரியில் படிக்கும் நாட்களில் தமிழ் மன்றத்தின் தலைவராக இருந்தார். அத்துடன் அவர் ஆங்கில தர்க்கப் போட்டிகளிலும் தமிழ் தர்க்கப் போட்டிகளிலும் முதல்வராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் சட்டக் கல்லூரியில் ஆங்கிலம் தமிழ் சம்பந்தப்பட்ட பேச்சு வல்லமையிலும் எழுந்தமான பேச்சுப்போட்டியிலும் நான்கு தங்கப் பதக்கங்களைப் பரிசாகப் பெற்றார்.

திரு. அம்பிகைபாலன், கடந்த பத்து வருடகாலமாகத் திறமையுடனும் சுறுசுறுப்புடனும் சட்டத்தரணியாய்க் கடமையாற்றி வருகின்றார். யாழ்ப்பாணப் பிரதேசத்துக்கு நியமிக்கப்பட்ட இளமையான சமாதான நீதிபதிகளிலும், உத்திபோகப்பற்றற்ற நீதவான்களிலும் இவர் ஒருவராவர்.

# பெரியபுராணச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நடைபெறும் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவில் இன்று எறிபத்தர் பற்றி சைவப்புலவர் சு. செல்லத்துரை பேசவுள்ளார்.

# அடம்பனில் வீடுடைத்து நகைகள் கொள்ளை!

(மன்னார்)

வீட்டிலுள்ளோர் ஆழ்ந்த நித்திரையிலிருந்தபோது வீடு உடைத்துஉள்ளே புகுந்த திருடர்கள் நகைகள், பணம் உட்பட 29,100 ரூபா பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் அடம்பன் – மாலைக்குழியைச் சேர்ந்த எம். விஜயரட்ணம் என்பவரதுவீட்டிலேயே இடம் பெற்றது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக 3 சந்தேகநபர்கள் பொலிசாரினால் தேடப்பட்டுவருகின்றனர்.

இத்திருட்டுச்சம்பவம் பற்றி மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. யோககுமார், பொலிஸ் சார்ஜண்ட் திரு. பரமானந்தம் ஆகியோர் அடங்கிய பொலிஸ் கோஷ்டியினர் விசாரணைமேற்கொண்டு வருகின்றனர். [க]

# சுதந்திர கட்சியில் சேர்ந்தார்

(மன்னார்)

ஐ. தே. கட்சியிலிருந்து விலகிய மன்னார் டாக்டர் றொபேர்ட் குரூஸ் சுதந்திரக் கட்சியில் (சிறிமா பிரிவு சேர்ந்துள்ளார்.

இவர் ஐ. தே. கட்சியைப் பல வருட காலம் ஆதரித்து வந்து அண்மையில் ஐ தே. கட்சியைவிட்டுவிலகியுள்ளார். (க)

## மன்னார்பிரதேச சபை

# தலைவர் தெரிவில் பாகுபாடு இல்லை!

[மன்னார்]

''இந்தப் பிரதேசசபைத் தேர்தலில் சகல அங்கத்தவர்களும் சாதி, மத பேதமற்ற ஒற்றுமையை எடுத்துக்காட்டிவிட்டார்கள். இச்சபையில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக இருப்பதால், ஒரு முஸ்லிம் பிரதேசத் தலைவராக வரமுடியாதென எண்ணியிருந்தேன்.

கத்தோலிக்க மக்கள் தமது பெருமையை எடுத்துக்காட்டி எனது எண்ணத்தை மாற்றிவிட்டார்கள்.''

இவ்வாறு மன்னார் பொது விளையாட்டுக் களரியில் நடைபெற்ற மன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்காகன பிரதேசசபைத் தேர்தலின் போது பிரதேச சபைத்தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாப் எஸ். ஏ. கபூர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தமது உரையில் நாம் எல்லோரும் சாதி, மத பேதமின்றி மன்னார்பகுதி அபிவிருத்திக்காக ஒற்றுமையோடு உழைப்போம். மன்னார் பகுதியில் பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மன்னார் அபிவிருத்திசபையின் உதவியுடன் மன்னார் பகுதியை அபிவிருத்தி செய்வோம். முக்கியமாக கிராமப் புறங்களிலேயே பெரும்பாலான அபிவிருத்திகளை மேற்கொள்ள நான் முயற்சிகள் எடுப்பேன் என்றார்,

# பாரதி வேண்டிநின்ற சுதந்திர உணர்வை நாம் மறந்துவிட்டோம்

## யாழ். எம். பி. 'யோகேஸ்' கவலை

[யாழ்ப்பாணம்]

''பாரதி நூற்றாண்டைக் கொண்டாடும் நாம் அவர் வேண்டிநின்ற சுதந்திரத்தை – சுதந்திர உணர்வை மறந்துவிட்டோம். பாரதி வெறுத்து ஒதுக்கிப் பாடிய தீண்டாமையை இன்றுவரை கட்டிக் காப்பதில் தீவிரமாகக் கவனமெடுத்து வருகின்றோம். இது வேதனைக்குரியதாகும். இங்கு பாரதி பெயரால் ஒரு சனசமூக நிலையத்தின் புதிய கட்டிடம் திறக்கப்படுவது மிகவும் பொருத்தமானது.

இவ்வாறு கைதடி மேற்கில் உள்ள பாரதி சனசமூக நிலைய புதிய கட்டிடத் திறப்புவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ். எம். பி. திரு. வெ யோகேஸ்வரன் கூறினார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், நமது சமூகத்தில் புரையோடியுள்ள சாதிவேற்றுமையை நீக்கி சமூக ஒற்றுமையைப் பேணுவதிலும் கிராம மக்களின் அறிவை வளர்ப்பதிலும், சனசமூக நிலையங்கள் பெரும்பணியாற்றுகின்றன. எமது இன்றைய !இழிவான அடிமை வாழ்வில் இருந்து விடுதலை பெறுதற்கு இத்தகைய சனசமூக நிலையங்கள் மூலமாக வழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். கிராமங்களின் வளர்ச்சி முன்னேற்றம் மட்டுமன்றி தமிழினத்தின் விழப்புணர்ச்சிக்கும் சனசமூகநிலையங்களின் பங்களிப்புகள் அதிகம் உண்டு' என்றார்.

சனசமூக நிலையத் தலைவர் திரு. வே. கு. நித்தியகுமார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், தென்வராட்சி பிரதேச சபைத் தலைவரும் யாழ். மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளருமான திரு. வே. முத்துக்குமாரசாமி ஆசிரியர் திரு. ப. செல்லத்துரை தென்மராட்சி ச. ச நிலைய ஒன்றியத்தலைவர் திரு. வி. சு. ? ரைராசா ஆகியோரும் உரையாற்றினார்கள் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன (உ)

# 750 ரூபா அபராதம்

[மன்னார்]

சீனியின் விலையை கூட்டி விற்ற வர்த்தகர் ஒருவருக்கு மன்னார் நீதவான் திரு. யடவெல 750 ரூபா அபராதம் விதித்தார்.

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் ஒரு கிலோ சீனியை கட்டுப்பாட்டு விலையிலும் பார்கக 90 சதம் கூடுதலாக விற்பனை செய்தார் என மன்னார் விலைகட்டுப்பாட்டு பரிசோதகர் ஜனாப் எம். ஏ. சி. எம். றஸீன் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கினை மன்னார் நீதவான் விசாரணைக்கு எடுத்தபோது கொள்ளைலாபம்பெற்ற வியாபாரிக்கு 750 ரூபா அபராதம் விதித்தார். [க]

# முழங்காவில்

[4-ம் பக்கத் தொடர்ச்சி)

கிணற்றடியிற் சென்று பார்த்தபொழுது அரைக்கிணறு நிறைந்த நீர் இருக்கக்கண்டார், அக்காரணத்தால் இவ்விடம் முழங்காலில் என்ற பெயரைப் பெற்றது. இன்றும் இந்தக் கிணற்றிலிருந்தே பலரும் நீர் எடுத்துப் பாவிக்கின்றார்கள். அரசாங்கமும் குடியேற்றவாசிகளுக்குக் குழாய்க்கிணறுகள் வெட்டிக் கொடுத்திருக்கின்றனர்.

இந்தவிநாயகர் ஆலயத்திற்குத் தென்பாகமாக ஒருமைல் தூரத்தில் 4 பண்ணை என்ற இடத்தில் மன்னார் மாதோட்டம் நாயன்மார்பாடல் பெற்ற திருகேதீஸ்வரத்திற்கு வடபாகமாகவும் முற்காலத்தில் மன்னார்ப் பெரும் பிரிவிற்கும் யாழ்ப்பாண பெரும்பிரிவிற்கும் எல்லையாகவுள்ள எல்லைப் பிடிக்கு வடபாகமாக அரசாங்கத்திடம் காணி பெற்று முழங்காவில் செல்லச்கதிர்காமமென்னும் ஸ்ரீமுருகன் ஆலய நிர்மாண வேலைகள் நடைபெற்றுவருகின்றன. இந்த ஆலயததை நிர்மாணம் செய்வதில் சகலரும் எனக்கு உதவி அளிக்க வேண்டுகிறேன்.

## சேர்ச்சிலின்

# பாதுகாப்பு அரண்

லண்டன், ஜுலை, 11

பிரிட்டனின் முன்னாள் பிரதம மந்திரி வின்சண்ட் சேர்ச்சில் இரண்டாவது உலகமகாயுத்தத்தின்போது தனது உத்தியோகபூர்வ அலுவல்களுக்குப் பயன்படுத்திய குண்டு தாக்கி சேதப்படுத்தமுடியாத பாதுகாப்பு அரணை பிரிட்டிஷ் அரசு உல்லாசப் பிரயாணிகளின் கவர்ச்சிப் பொருளாக மாற்றியமைக்கவுள்ளது

இந்தப் பாதுகாப்பு அரணை திருத்தியமைப்பதற்காக பிரிட்டன் 15 லட்சம் ஸ்டேர்லிங் பவுணைச் செலவிடவுள்ளதகத் தெரிவிக்கப்பட்டது (வெ

# கி. வா. ஜகந்நாதன் கூறிய ஊசி நூல்கதை

-- முல்லைமணி

"கலைமகள்' ஆசிரியர் கி வா. ஜகந்நாதன் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது நீர்வேலிகந்த சாமி கோயில் குருக்களது இல்லத்தில் தங்கியிருந்தார். அவரை கவிஞர் முருகையனுடன் பார்க்கச் சென்றேன். "யார் இந்த அன்பர்" என்று என்னைக் காட்டி முருகையனிடம் கேட்டார்.

"முல்லைமணியா? அப்படியென்றால் முல்லைத்தீவைச் சேர்ந்தவரா? என்கிறார். 'முல்லைத்தீவுக்கு நான் போயிருக்கிறேன். முல்லைத்தீவுகளென்ன எல்லாத் தீவுக்கும் போயிருக்கிறேன். இலங்கையில் நான் போகாத இடமே இல்லை'' என்கிறார் கி. வா. ஜ.

முதியவர் ஒருவர் அங்கு வந்து வணக்கம் தெரிவிக்கிறார். முதியவரின் முதுகு கூனியிருந்தது 'பணிவாகவேஇருக்கிறீர்கள்' என்று கூறிவிட்டு முருகையனை முதியவருக்கு அறிமுகப்படுத்த முனைகிறார். "கவிஞர் முருகையன் எனது நீண்டகால நண்பர்.

அங்கே நின்ற இன்னொரு அன்பர் இவர் முருகையனின் மாமனரின் தமையன் என்கிறார். "அப்படியா! கொல்லர் தெருவில் ஊசிவிற்ற கதை தான். பரவாயில்லை இப்பொழுது கொல்லர் ஊசிசெய்வதில்லை. அதனல் கொல்லர் தெருவிலும் விற்கலாம்'' என்கிறர். "தாங்கள் ஊசிவிற்பதில்லையே நூல் [புத்தகம்] அல்லவா விற்கிறீர்கள் என்று சிலேடையாக முருகையன் கூறுகின்றர். 'எனக்கோரு ஊசி நூல் கதை, நினைவுக்கு வருகின்றது'' எனக் கதையைத் தொடங்குகின்றர்.

"ஒரு பெண் மணி பத்து வடைகளைச் சுட்டார். அவற்றில் ஐந்தைத் தான் உண்டு விட்டு மிகுதி ஐந்தையும் கணவனுக்கென வைத்திருந்தாள். இன்று வெளியூருக்குச் சென்றிருந்த கணவன் வீடு திரும்பவில்லை. அடுத்த நாள் நான்கு வடைகளையும் உண்டுவிட்டு ஒரு வடையைக் கணவனுக்காக வைத்திருந்தாள். கணவன் வீடு சேர்ந்தான். மனைவி வடையை எடுத்துக்கொடுத்தாள். அந்த வடை ஊசி [உப்பிப் பழுதடைந்து] இருந்தது. அதைப் பிய்த்துப் பார்த்தான். நூல் இழுபட்டது. மனைவியிடம் வடையைத் திருப்பிக் கொடுத்தான். ஏன் திருப்பித் தருகின்றீர்கள் என்று கேட்டாள் மனைவி. ஊசியும் நூலும் தையலுக்குத் தான் தேவை. அதனலேயே உன்னிடம் தந்தேன் என்றுன்.''

"இப்படியான கதைகளையே நான் பேசும்போது குறிப்பிடுவேன்'' என்கிறர் கி. வா. ஜ.

"கலைமகள் பொன்விழா எப்படி நன்முறை நடைபெற்றதா?'' முருகையன் வினவுகின்றர்.

"மிக நன்முக நடைபெற்றது. எனக்குத்தானே எல்லோருடைய ஆதரவும் கிடைத்தது. அரசியலிலும், சினிமாவிலும் நான் தலையிடுவதில்லை. அதனலே எனக்கு எல்லாக்கட்சிகளாலும் ஆதரவு உண்டு. இலங்கையிலே இப்பொழுது எல்லாம் விலை ஏற்றம். பொன்விழா மலரைக் கூட ஐம்பது ரூபா விற்கிறார்களாம்.''

சம்பாஷணை வேறு பக்கம் திரும்புகின்றது. "பழைய நூல்களைப் படிப்பவர்கள் தொகை குறைந்துவிட்டது. யாழ்ப்பாணத்தில கந்தபுராணத்தைப் படிக்கிறார்கள் ரொம்ப நல்ல விஷயம்.

இன்னொரு அன்பர் வணக்கம் செலுத்திக்கொண்டு வருகிறார் அவரைக்காட்டி இவர் தான் என்பார்த்தசாரதி என்றர். விடயம் விளங்காமல் நாம் திகைக்கிறோம், "முன்பு ஒருமுறை இலங்கைக்கு வந்த போது ஒரு கோயிலில் பத்து நாள் பிரசங்கம் செய்தேன் என்னை ஒவ்வொரு நாளும் வந்து காரில் அழைத்துச் சென்றவர் இவர்தான் நான் பார்த்த சாரதி இவர்'' என்கிறர்.

முருகையனைப் பார்த்து "இப்பொழுது எழுதுவதில்லையா?'' என்கிறர் "மிகக்குறைவாகவே எழுதுகிறேன்''என்கிறர் முருகையன். உங்களுக்கு திருமணமாகி விட்டதல்லவா எத்தனை குழந்தைகள்? இளம் வயதிலே உற்சாகமாக எழுதுபவர்கள் பின்னர் எழுதுவதை நிறுத்திக் கொள்கிறர்கள். [ல்சபாநாதன் கோயில்களைப் பற்றி எழுதிவந்தார். பின்னர் எழுதுவதை நிறுத்திவிட்டார். ஏன் நிறுத்தி விட்டீர்கள் என்று கேட்டேன்' எனக்குத் திருமணமாகிவிட்டது. என்று பதிலுறுத்தார்.'' எல்லோரும் சிரிக்கின்றனர்.

ஆவரங்கால் பண்டிதர் ஒருவர் வருகின்றர் "நாங்கள் ஒரு கோயில் கும்பாபிஷேகம் செய்துள்ளோம். அந்தத் தலத்துக்குத் தாங்கள் வந்து சிறுசொற்பொழிவு ஆற்ற வேண்டும்'' என்று விநயமான வேண்டுகோள் விடுக்கிறர்.

நான் யர் கேட்டாலும் தலையை ஆட்டுவேன். எனது புரோக்கிறும் போடுறது குருக்கள்தான், அவரிடம் கேளுங்கள் என்கிறர்.'' குருக்களைத் நான் காணவில்லை அங்கு.

"கைலாசநாதக் குருக்களின் அறுபதாவது ஆண்டுவிழா ஏற்பாடுகளைச் செய்வதற்குப் போயிருக்கிறர் வந்ததும் அவரிடம் கூறவும்'' என்கிறர்.

நானும் முருகையனும் வணக்கம் செலுத்திவிட்டு விடைபெறுகின்றேம்.



திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் திருவிழாவின்போது யூனிவேர்சல் நிறுவனத்தாரால் நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியில் முதல் இடம்பெற்ற யாழ். நகரைச் சேர்ந்த செல்வன் கே. கனகசபேசன், யாழ். எம். பி திரு வெ. யோகேஸ்வரனிடம் இருந்து தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொண்டபோது எடுக்கப்பட்ட படம் அருகில் நிறுவன இயக்குநர் திரு. பொ. ஐங்கரநேசன் காணப்படுகிருர்.

## யாழ். இந்துவில் பயிற்சி பெறுபவர்கள் திறமைசாலிகள்''

### விளையாட்டுப் போட்டியில் கல்லூரி அதிபர்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பயிற்சி பெறுபவர்கள், திறமைசாலிகளாகவே விளங்குகின்றனர் இங்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பலாலி ஆசிரியர் கல்லூரி அதிபர் திரு கனகலிங்கம் இதற்குச் சான்ருக விளங்குகிருர்.''

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் திரு பொ.ச குமாரசாமி பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினர் திரு இ. கனகலிங்கம் பேசுகையில், அரை நூற்ருண்டு காலமாகச் சேவையாற்றிய யாழ். பாடசாலை விளையாட்டுச் சங்கம் செயல்இழந்து இருப்பது கவலையளிப்பதாக உள்ளதெனக் குறிப்பிட்டார்.

திருமதி கமலாசனி கனகலிங்கம் பரிசில்கள் வழங்கினர்.

பசுபதி இல்லம் முதலாம் இடத்தையும், சபாபதி இல்லமும், நாகலிங்கம் இல்லமும் முறையே இரண்டாம் மூன்றும் இடங்களையும் பெற்றது.

1982-ம் வருட சாம்பியன்கள் விபரம்:-

சோ. சுரேஸ் 13 வயதுப் பிரிவு (சபாபதி); கே புவனேந்திரன் - 14 வயதுப் பிரிவு(சபாபதி); ஏ. ஜெயக்குமார் - 15 வயதுப் பிரிவு (நாகலிங்கம்); . கருணபாலன் - 16 வயதுப் பிரிவு (பசுபதி); சி. தவேந்திரன் சபாபதி); ச.பார்த்திபன் (பசுபதி) - 17 வயதுப் பிரிவு; ஸ்ரீ. ரவிவர்மன் (செல்வத்துரை) - 19 வயதுப் பிரிவு.

கடத்தப்படவிருந்த

## பொலியஸ்டர் துணிகள் பொலிஸாரிடம் சிக்கின!

[மன்னுர்]

இந்தியாவுக்கு கடத்திச் செல்லப்படவிருந்தபொயலிஸ்டர் துணி வகைகளை பொலிஸார் கைப்பற்றினர்.

இரகசிய தகவலையடுத்து எருக்கலம்பிட்டிக்குச் சென்ற மன்னுர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஞானப்பிரகாசம், கான்டபிள்கள் திரு. ஆர். எஸ். ஜெயபாலன். திரு. ஜெயவர்த்தனு ஆகியோர் இந்தியாவுக்குக் கடத்திச்செல்லவென 2 பொதிகளாகக் கட்டப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான பொலியஸ்டர் துணி வகைகளைக் கைப்பற்றினர்.

இக்கடத்தல் முயற்சி தொடர்பாக மஹ்றூப் என்பவர் பொலிசாரினுல் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு சுங்க இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (க)

T. V. ஏரியல் அமைப்பில்
முதன்மைமிக்க ஸ்தாபனம்
சென்னை, ரூபவாகினி நிகழ்ச்சிகளை
T V யில் சிரமமின்றி பார்க்க
உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துத் தருவோம்.
நொடிப்பொழுதில், T V ஏரியல்
கோளாறுகள் சரி செய்யலாம்.
எமது பராமரிப்பு சேவை
24 மணி நேரமும் செயல்படுகின்றது
சுபநிகழ்ச்சிகளை வீடியோ படக்காட்சியில்
எடுப்பதற்கு
குறைந்த கட்டணம்
பல்வேறு TV செட்டுகளை
பினன்ஸ் வசதியுடன் பெறலாம்.
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்
ஸ்ரீதர் தியேட்டர் முன்,
யாழ்ப்பாணம்.

## "ஆசிரியமணி'' பட்டமளிப்பு

[யாழ்ப்பாணம்]

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த திரு. விஸ்வஸ்ரீ கிருஷ்சாமி சிவகுருநாதன், சிவஸ்ரீ ராஜகணேசமணிக் குருக்களினுல் திருகோணமலை உப்புவெளி சோலையடி வைரவர் ஆலயத்தில் "ஆசிரியமணி'' என்றபட்டமளித்துப் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். இவ்வைபவத்தில் கணேசமணிக் குருக்கள் பேசுகையில் திரு. சிவகுருநாதன் சிறந்த பண்பும் நற்குணமும் பொருந்தியவர் என்றும் ஆசிரியராகக் கடமையாற்றும் இவர் தொடர்ந்து சைவ சமயத்திற்கும் சங்கீதக் கலைக்கும் அரியபணியாற்ற வேண்டும் என்றும் கூறினர்.

## உதை பந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: திரு. இ. கனகலிங்கம், உபதலைவர்கள்: திரு. வ. கணேசலிங்கம், திரு. கே. யதுகுலசிங், திரு. இ.மகேந்திரன். திரு க. தனபாலசிங்கம், திரு. எஸ். அன்ரனிப்பிள்ளை செயலாளர்: திரு நா. சோமசுந்தரம். உபசெயலாளர்: திரு. எஸ். ஜெயரத்தினம், பொருளாளர்: திரு. ஆர்..செல்வராஜா

## வவனியா இளைஞர்களுக்கு விளையாட்டுப்பயிற்சி

[வவனியா]

வவனியா மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஆதரவில் வவனியா மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கான பயிற்சி வகுப்புக்கள் நெடுங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் இம்மாதம் 29-ம் திகதி தொடக்கம் 31-ம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

இப்பயிற்சி வகுப்புக்களில் உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகியவற்றில்பயிற்சிகள்அளிக்கப்படவிருக்கின்றன. இப்பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொள்ள விரும்பும்பாடசாலைகள், இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஆதியன இம்மாதம் 20-ம் திகதிக்கு முன்னர் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி, தேசிய இளைஞர் சேவைமன்றம், வவனியா. என்றவிலாசத்திற்கு தொடர்பு கொள்ளும்படி கேட்க்கப்பட்டுள்ளனர். மேற்படி பயிற்சிக்கான ஒழுங்குகளை இளைஞர் சேவை அதிகாரி திரு. எஸ். சிவபாலசிங்கம்விளையாட்டு அமைச்சின் அதிகாரிகளுடன் இணைந்து மேற்கொண்டுள்ளார். (அரி. நி)

## கலைப்போட்டி முடிவுகள்

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டைத்தொகுதி பாடசாலைகளுக்கிடையிலான சங்கீத, நாடக, நடன, கலைப் போட்டிகள் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராஜா தலைமையில் நடைபெற்றது.

இசை நாடகப் போட்டியில் பண்டத்தரிப்புமகளிர் கல்லூரியின் "குருமைந்தன்'' என்ற இசை நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றது நாட்டிய நாடகப் போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி தயாரித்து அளித்த "கயமுகன் போர்'' என்ற நாட்டிய நாடகம் முதலாமிடத்தைப் பெற்றது. மாவட்ட ரீதியில் நடைபெறவிருக்கும் போட்டியில் இந்த இசை நாடகமும், நாட்டிய நாடகமும் பங்குபற்றவுள்ளன.

# "யாழ். மாவட்டசபை

# சித்தவைத்திய விருத்திக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்"

## பிரேரணை முன்னறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

சித்தவைத்திய முறையை அபிவிருத்திசெய்வதற்கு யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்னும் பிரேரணை ஒன்றை திரு. க. தம்பிமுத்து, கொண்டுவருவதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

இம்மாதம் 14-ம் திகதி யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் பொதுக்கூட்டம் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இப்பிரேரணை விபரம் வருமாறு:

''இலங்கையில் ஆயுள்வேத வைத்திய முறையேயன்றிச் சித்த வைத்தியமுறை கவனிப்பாரற்றநிலையில் இருப்பதால், சித்தவைத்திய முறையை அபிவிருத்தி செய்வதற்கும் அதில் ஆராய்ச்சி நடத்துவதற்கும் சித்தவைத்திய மருந்துகளின் உபயோகத்தை ஊக்குவித்துப்பரப்புவதற்கும், குப்தா கொமிஷன் சிபார்சுக்கிணங்க யாழ்ப்பாணத்தில் ஒரு சித்த வைத்தியசபை, சித்தவைத்திய சாலையுடன் இணைந்த சித்தவைத்தியக்கல்லூரி ஆகியவற்றை நிறுவவும் இதற்குக் கைதடியில் தற்போது காலியாகவுள்ள அரசாங்க சித்த வைத்தியக்கல்லூரிக் கட்டிடத்தை பயன்படுத்தவும்.

யாழ். மாவட்டத்திலுள்ள இலவசசித்தஆயுள்வேத வைத்திய சாலைகள் சம்பந்தமான சகல விடயங்களையும் கவனிப்பதற்கு ஒருமாவட்ட சித்த ஆயுர்வேத வைத்திய அதிகாரி பதவியை உருவாக்குவதற்கும் துரிதநடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென இச்சபைதீர்மானிக்கிறது. (மா)

## சாராய கடத்தல் சந்தேகநபர் கைது

(மன்னார்

அனுமதிப்பத்திரமின்றி பெருந்தொகையான சாராயப் போத்தல்களை சாக்கினுள் மறைத்து வைத்து கடத்திச் சென்றவர் மன்னார் பொலிசாரிடம் அகப்பட்டார்.

இரகசிய தகவல் ஒன்றினையடுத்து மன்னார் பஸ் நிலையத்தில் வைத்து பஸ் ஒன்றினுள் இருந்த சாக்கு மூடை ஒன்றைச் சோதனையிட்ட சார்சன்ட் பி. எஸ். பரமானந்தம், கான்ஸ்டபிள் ஆர். எஸ். ஜெயபாலன், சி. தாசிம் ஆகியோர் பெருந்தொகையான சாராயப்போத்தல்களைக் கைப்பற்றினர்.

இச்சாராயக் கடத்தல் சம்பவம் தொடர்பாக நுவரெலியாவைச் சேர்ந்த ராமுராஜா என்பவர் பொலிசாரினுல் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். (க)

## கூடுதலானவருக்கு பயிற்சி

[கொழும்பு]

வைத்தியர்கள், தாதிகள் போன்ருேருக்கு நிலவிவரும் தட்டுப்பாட்டை நீக்கக் கூடுதலானவர்களுக்கு இத்துறைகளில் பயிற்சியளிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து தெரிவித்தார். [வெ]

## பொறுப்புடைய

(2ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்ட மாதர் சழகம் ஒரு தையல் பயிற்சி நிலையத்தை அல்லைப்பிட்டி சுகநல மகளிர் சங்கத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றது. அவுஸ்திரேலியா தூதரகம் எமது கழகத்துக்கு வழங்கிய நிதியிலிருந்து இரு தையல் மெஷின்களை வாங்கி இத் தையல் நிலையம் ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

இப்பகுதியில் வசிக்கும் ஏழைப் பெண்கள் இத்தத் தையல் நிலையத்தில் பயின்று வருவாய்தரக்கூடிய முறையில் பயன்படுத்தித் திட்டமிட்ட முறையில் குடும்பங்களை உருவாக்கி கிராமத்தைச் சீர்சிறப்புடன் கட்டி எழுப்ப முயற்சி எடுக்க வேண்டும்'' என்ருர்.

மற்றும் யாழ் மாவட்டத் திட்டமிடல் அதிகாரி திரு. எஸ். புவனேந்திரன், யாழ். மாவட்ட குடும்பதிட்டச் சங்க பணிப்பாளர் திரு. பூவேந்திரன். திருமதி நடேஸ்வரி சச்சிதானந்த, திருமதி இராமச்சந்திரன் உட்படப்பலர் பேசினர்கள். (அ

## இன்றைய பலன்

ஆனி மாதம் 28-ம் திகதி

திங்கட்கிழமை

(12—7—82)

மேடம்: கனிவான நினைவுகளில் மூழ்கிப் போவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும். நீண்டநாள் அபிலாசை இன்று நிறைவேறும். பிறர் உதவி உண்டு.

இடபம்: பேராசையின்மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள். இதனுல் விபரீதங்கள் தோன்றக்கூடும். மறைமுக எதிர்ப்புக்களைச் சமாளிக்க வேண்டிய சர்தர்ப்பம் ஏற்படலாம்.

மிதுனம்: நன்மையானதிருப்பங்கள் காணப்படும். திறமையின் மூலம் புதிய தொழிலுக்கான வாய்ப்புக்கிடைக்கும். தாய்வழி மூலம் பொருள் வரவுக்கு இடமுண்டு.

கடகம்: சிக்கல்கள் வாழ்க்கையில் புதிர்போடும். குடும்பத்தில் சிறு தொல்லைகள் தோன்றிமறையும். வெளியூர் பிரயாணங்களை இன்று தவிர்த்துக் கொள்ளவும்.

சிங்கம்: துன்பத்தின் சாயல்கள் மனதிலே படியும். புனைந்துரைகளால் மனது புண்படும். சிலர் உதவி செய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிக் கொள்ளும்.

கன்னி: குடும்பம் இன்பக் கலைக்கோவிலாக மாறும். இசைத் துறையில் ஆர்வம் ஏற்படும். பிள்ளைகளினுல் பெருமைக்கு இடமுண்டு. நல்ல சுப தினம்.

துலாம்: அவசரப் போக்கினுல் அதிகாரிகளைப் பகைத்துக் கொள்வீர்கள். எதற்கெடுத்தாலும் ஆத்திரம் ஏற்படும். தவருன வழிமூலம் பணம் பாழாகும்.

விருச்சிகம்: கலைஞர்கள் போற்றப்படுவார்கள். வெளியூர்களில் இருந்து அழைப்புக் கிடைக்கலாம். பிதாவழித் தனவரவுக்கும் இடமுண்டு. நல்ல தினம்.

தனு: புதிய கண்டுபிடிப்புகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், விஞ்ஞானத்துறையில் ஈடுபாடுடையவர்கள் பாராட்டப்படுவார்கள். உயர்ந்த அந்தஸ்தும் கிடைக்கும்.

மகரம்: மெத்தவும்பொருள் சேரும். மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிட்டும். தித்திக்கும் செய்தியுடன் தேனுன வாழ்வும் உண்டு.

கும்பம்: எதிர்பாராத விளைவுகளின் மூலம் செலவுகள் அதிகமாகும். சிலர் வாழ்க்கையில் கடன்பட நேரிடும், பிணிக்கு இடம் கொடாது இருக்கவும்.

மீனம்: முன்னேற்றம் தடைபடும். குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம். ஏதேச்சாதிகாரப் போக்கால் சிலரைப் பகைத்துக் கொள்ள நேரிடும்.

சோதிடகலாநிதி

திருமலை

கூ. வேலுப்பிள்ளை

## பண்டத்தரிப்பில் வங்கிக்கிளை

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பில் இலங்கை வங்கிக்கிளை ஒன்றை நிறுவுவதற்கு இலங்கை வங்கித் தலைமைப்பீடம் தீர்மானித்துள்ளது. இதுதொடர்பாக இலங்கைவங்கி யாழ்.மாவட்ட முகாமையாளர் திரு. கா. வே. முத்துக்குமாரசாமியும் மற்றும் வங்கி உயர் அதிகாரிகளும் பண்டத்தரிப்புக்கு வந்து வங்கி அமைப்பதற்கான இடவசதியை பார்வையிட்டுச் சென்றனர்.

## பிஸ்கால் விற்பனை

### மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை.

கந்தப்பு சோமசுந்தரம், உடுப்பிட்டி. — வழக்காளி
வழக்கு இல: 14150 எதிர்
1. பொன்னையா சின்னத்துரை,
2. பொன்னையா சின்னத்தம்பி. — எதிராளிகள்

மேலே சொல்லப்பட்ட 2-ம் எதிராளி பொன்னையா சின்னத்தம்பி என்பவருக்கெதிராக 1980-ம் ஆண்டு ஆனி மாதம் 30-ம் திகதியன்று இக்கோட்டில் வழங்கிய தீர்வையின்படி தீர்வைத்தொகையை ரூபா 1740/35 சதத்தையும் மற்றும் பிஸ்கால் செலவுகளையும் அறவிடுவதற்காக என்னுல் 1982-ம் ஆண்டு ஆவணிமாதம் 18-ம் திகதியன்று காலை 10மணியளவில் கீழே குறித்த ஆதனத்தையும் அதன் பிரயோசனங்களையும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத் தருகிறேன்.

### 2ம் எதிராளியின் விற்பனை செய்யப்படும் ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று உடுப்பிட்டி இறை பெரிய செம்பாடு தோட்டம். மேற்படி நி. பர. 5½ இப்பிரிவுகட்கு எல்லை கிழக்கு கந்தசாமி பெண் அன்னம்மாவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு மயில்வாகனம் பெண் தெய்வானை மறுநாமம் தங்கமுத்துவுக்குடையவாதனம். தெற்கு கந்தையா செல்லமுத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் அடங்கலிற் சொரியலாய் நி. பர. 3 நீக்கி மிகுதியிற் சொரியலாய் 1/3 பங்கும் மேற்குப் புறமாக இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்கால் உரித்தும்.

2. மேற்படியிறை பெரிய செம்பாடு தோட்டம் 2 மேற்படி நி. பர. 5 1/8 இப்பிரிவுகட்கு ஆட்சிப்படி நி. பர. 11 எல்லை கிழக்கு கந்தசாமி பெண் அன்னம்மாவுக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். வடக்கு ஒழுங்கு, மேற்கு மயில்வாகனம் பெண் தெய்வானை மறுநாமம் தங்கமுத்துவுக்குடையவாதனம். தெற்கு கந்தையா செல்லமுத்துவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். இவ் வெல்லைக்குட்பட்டவையடங்கலிற் சொரியலாய் அரைவாசியில், அரைவாசியில் 1/3பங்கும் இதற்கு மேற்குப்புறமாக செம்பாடு என்னும் வேறேர் காணிக்குள் இருக்கும் கிணற்றில் 1/3பங்கில் இதற்குரியபங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

க. செல்வராஜா,
பிஸ்கால்
3835 மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை.


ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—ஸ்ரீதேவி
பைலட் பிரேம்நாத்
[புதிய பிரதி]

சாந்தி (யாழ் நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
8-வது பரபரப்பூட்டும் வாரம்!
கமல் (இரட்டைவேடம்) சுஜாதா, அம்பிகா,
கடல் மீன்கள்
—கலர்—

வெலிங்டன் (மானிப்பாய்) தினசரி: 6-15, 9-30 சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன் ஸ்ரீதேவி
குரு (கலர்)

ராணி (யாழ் நகர்) 2-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
கடைசி வாரம்
ரஜனிகாந் சுஜாதா விஜயன் கராத்தே மணி ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வெற்றி முரசுகொட்டும் 3-வது மாதம்
கார்த்திக்-ராதா- தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
REVENGE OF THE PINK PANTHER

லிடோ (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
ராஜபார்வை

றீகல் [யாழ்நகர்] தினசரி; 10-30, 2-30, 6-15, 9-30
4-வது ஜனத்திரள் வாரம்
சிவாஜி, கீதா குமாரசிங்கா, ஜெயபாரதி
மோகனப் புன்னகை
(கலர்)

Windsor (Jaffna) Last Few Days
Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30 P.M.
BRUCE LEE in
THE GAME OF DEATH
(Color)
உலக சாம்பியன் புரூஸ்லியின் பயங்கரமான கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

ஸ்ரீதர் (யாழ். நகர்) 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார் — லக்ஷ்மி
அவன் அவள் அது

## வீட்டுக்கு தீவைப்பு வழக்கு:

# எதிரிகள் தலா 5000 ரூபா பிணையில்செல்ல அனுமதி!

(சாவகச்சேரி)

வீட்டுக்குத் தீவைத்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் முறைப்பாட்டுக்காரரின் சாட்சியத்தைத் தொடர்ந்து நீதிபதி எதிரிகளை தலா ரூபா 5000 பிணையில் செல்ல அனுமதித்தார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில்விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

கெருடாவிலைச் சேர்ந்தசெல்லன் கந்தசாமி என்பவரது பந்தலுக்கும் வீட்டுக்கும் தீ வைத்ததாக அவ்வூரைச் சேர்ந்த சிறீஸ்கந்தராசா, சிறியன் என்பவர்களு[ம்] எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரிசார்பில்சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயாவும் 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி சி. பொ. மயில்வாகனனும் ஆஜராகினர். வழக்கைப் பொலிசார் சார்பில் சார்ஜன்ட் வி' செல்லையா நெறிப்படுத்தினர். செல்லன் கந்தசாமி குறிப்பிட்டதாவது:— சம்பவதினம் இரவு 12 மணிவரை நானும் மனைவியும் பந்தலுக்குள் இருந்து கதைத்து [கொ]ண்டிருந்தோம். அப்போது எதிரிகள் வந்து பந்தலின் மூற்பக்கத்தில் நெருப்புக்குச்சியைத் தட்டிவைத்தார். 1ம் எதிரி ஸ்ரீகந்தராசாதான் குச்சியைத் தட்டிவைத்தனர்.

நான்படலைவரை துரத்திச் சென்றேன் அவர்கள் ஓடிவிட்டார்கள். இதனால் பந்தலுக்குள் அடங்கிய 22 புற்பாய்கள் கம்பளங்கள், நிறைதடங்கள், ஸ்பீக்கர், மணவறை, சீலை, உடுப்புகள், புத்தகங்கள் என்பனவும், பந்தல் இணைக்கப்பட்டவீடும் எரித்து சாம்பராகிவிட்டன. நட்டம் சுமார் 40, 000 ரூபாவரை இருக்கும் தீயிடப்பட்ட பொருட்கள் முழுவதும் என்னுடைய பொருளல்ல. இரவல் பொருட்களும் உண்டு. சம்பந்தப்பட்ட எதிரிகள் எனது சகோதரியின் புதல்வர்கள். சகோதரி குடியிருந்த காணி என்னுடையது அக்காணியிலிருந்து அவர்களை வெளியேற்றியதுதான் அவர்களுக்கும் கோபமாக இருக்கலாம்.

1ம் எதிரிகரப்புச்சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாய சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்கையில் சாட்சி குறிப்பிட்டதாவது:— நான் இலங்கைப் போக்குவரத்துச்சபை கோண்டாவில் டிப்போவில் சாரதியாகக் கடமையாற்றுகிறேன் எனதுமகளின் பூப்புனித நீராட்டுவிழாவை மிகவும் சிறப்பாக செய்தேன். நானும் சகோதரியும் சம்பவ தினத்திற்கு 6 மாதங்களுக்கு முன் கோபப்பட்டுக் கொண்டுடோம். சம்பவ தினத்திற்கு அதாவது 1981ம் ஆண்டில்அவ எனது காணிக்குள் இருந்தவர் அந்தக்காணிஅரசாங்கக்காணி ஆனால் உறுதி என்கைக்கு வரவில்லை. அரசாங்கத்திற்கு 160 ரூபா கட்டியிருக்கிறேன். இந்த வழக்கைப் பொறுத்த வரை நானும் மனைவிம்தான் சாட்சிகள் நானும் மனைவியும் இம்மன்றுக்கு வழக்காளியாகவும் எதிரியாகவும் வந்திருக்கிறோம்.

இவ்வைபவத்திற்குவரும்படி எனது மனைவிதான் போய் இவர்களுக்குச் சொன்னார். அவர்கள் வரவில்லை. நான் போய்ச் சொல்ல நினைக்கவில்லை, வீடு எரிந்தது 11ம் திகதி இரவு அதிகாலை. அன்று பகல் முழுவதும் பொலிசுக்கு முறைப்பாடு கொடுக்கவில்லை. விதானையாருக்கும் அறிவிக்கவில்லை. 12ம் திகதி பிற்பகல் வரையிற்குள் வாக்குமூலமளித்தேன். பொலிசுக்கு, முன்னர் நான் அறிவித்திருந்தும் அவர்கள் இடத்தைப் பார்க்கும் வரை எனது முறைப்பாட்டைப் பதியவில்லை எங்களுக்கு இவ்வளவு பெருந்தொகையான பொருட்களை இழந்த கவலையில் நாங்கள் துரிதமாக செயற்படவில்லை. எரிந்த பொருட்கள் எல்லாவற்றினது விபரத்தையும் பொலிசாருக்கு குறிப்பிடவில்லை. பொலிஸ் முறைப்பாட்டில் 50,000எனக் கூறியும் அவர்கள் 40,000 எனத்தான் எழுதினார்கள்.

மணவறைக்காரனுக்கும் ஸ்பீக்கர்காரனுக்கும் கட்டளை விட்டிருக்கிறேன். இன்று அவர்கள் மன்றுக்குச் சமுகங் கொடுக்கவில்லை. 10ம் திகதி இரவு நானும் மனைவியும் நித்திரை கொள்ளவில்லை. எனது வீட்டில் அன்றைய தினம் மனைவி தாயார் பிள்ளைகள் படுத்திருந்தார்கள். ஆனால் நானும் மனைவியும் நித்திரை வராததினால் கதைத்துக் கொண்டிருந்தோம்.

நீதிபதி எம். எச். காரியப்பர் மேல் விசாரணையை ஆகஸ்ட் மாதம் 11ம் திகதிக்கு ஒத்திவைத்து எதிரிகளைத் தலா 5000 ரூபா பிணையில் செல்லுமாறும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பொலிஸ்நிலையப் பதிவேட்டில் கையொப்பமிடவேண்டுமெனவும் உத்தரவிட்டார். [க]

## "சமய வளர்ச்சிக்கு உழைத்தவர்"

[புலோலி]

"மரணம் என்பது எங்கள் மத்தியில் எப்போதும் இருக்கின்றது. அதனை எதிர்நோக்க நாங்கள் எப்போதும் ஆயத்தமாக இரு[க்]கவேண்டும். காலஞ்சென்ற நீதவான் திரு. மகேசன் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டு தாய்மொழி வளர்ச்சியில் கொண்ட பற்றினாலேயே சென்னையில் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச தமிழ் மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்.

இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் காலஞ்சென்ற நீதவான் திரு. கே. எஸ். மகேசனுக்கு அஞ்சலி செலுத்தி பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. எஸ். இராஜநாதன் பேசுகையில் குறிப்பிட்டார். மாவட்ட நீதிபதி திரு. இராஜநாதன் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தாவது:

காலஞ் சென்ற நீதவான் திரு. மகேசன் கச்சாயிலே பிறந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ். கல்லூரி என்பனவற்றில் கல்விபயின்று 1969ம் ஆண்டு சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கொழும்பு நீதிமன்றங்களில் தலைசிறந்த சட்டத்தரணியாக விளங்கிய திரு. மகேசன் 1979ம் ஆண்டு மார்கழி மாதம் யாழ். மேலதிக நீதவானாகப் பதவியேற்றார். 1980ம் ஆண்டு பங்குனி மாதம் பருத்தித்துறை நீதிமன்ற நீதவானாக நியமிக்கப்பட்டார். அவர் நீதவானாகமட்டுமிராமல் சமுதாய வளர்ச்சிகருதி தனது ஓய்வு நேரங்களை சமய, கலை கலாச்சார மேம்பாட்டு நடவடிக்கைகளுக்குப்பயன்படுத்தி வந்தார்.

## ரூ. 5 ஆயிரம் அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். பெரியாஸ்பத்திரியில் கட்டப்பட்டு வரும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டிடத்திற்கு நல்லூர் ப.நோ.கூ. சங்கம் 5 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. [இ]

## இஸ்ரேலிய....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிருந்து வெளியேறுமாறு இந்திய அரசு கடந்த வியாழக்கிழமை கேட்டிருந்தது தெரிந்ததே.

பம்பாயிலுள்ள இஸ்ரேலிய அலுவலகத்தை மூடுவதுபற்றி இந்திய அரசு ஆராய்ந்துவருவதாக வெளிநாட்டமைச்சர் திரு. நரசிம்மராவ்பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (செ)

## காயமடைந்த...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். பின் அங்கிருந்து யாழ். பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டேன்." (க)


## ஹோம் பிறுன்ஸ் லிமிட்

நவீனமானதும் திறமைமிக்கதுமான

ORION-12" (T. V. BLACK and WHITE)

விற்பனை செய்கின்றது

உடனே கட்டுப்பண முறையில் பெறலாம்

எம்மிடம் உள்ள அவசர தேவையான மற்றைய பொருட்கள்

HAWAI-LUXURY, PEDESTAL FAN-TABLE FAN, PHOENIX CYCLES - மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கு HELMET.

இப் பொருட்களை 420, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்திலும் பெறலாம்.

தலைமை காரியாலயம்:
ஹோம் பிறுன்ஸ் லிமிட்
இல. 463, காலி வீதி,
கொழும்பு—3
தொலைபேசி;58910

கிளை காரியாலயம்:
ஹோம் பிறுன்ஸ் லிமிட்
இல. 82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8310


## இப்படியும் நடக்கிறது

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகத்தின் பேட்டி ஒன்று, நேற்று வெளியான ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வெளியாகியுள்ளது.

அதில்—

"மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு நிர்வாக அதிகாரங்கள் எதுவுமே கிடையாது முன்னர் பட்டினசபை, கிராம சபை என்றிருந்தது. கிராமசபைகள்தான் இப்பொழுது மாவட்ட அபிவிருத்தி சபைகளாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

"நியூயோர்க் தமிழீழ மகாநாட்டில் ஈழம் பற்றி எதுவும் பேசக்கூடாது என்று அரசு விடுத்த கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக்கொண்டிருப்பதாக நான் கூறியதாக பத்திரிகையில் வெளிவந்த செய்தி தவறானது. நியூயோர்க் தமிழீழ மகாநாட்டில் எதனைப் பேசவேண்டும், எதனைப் பேசக்கூடாது என்று திரு. அமிர்தலிங்கத்திடம் நாம் எதுவுமே கூறவில்லை.

"அரசு...கூட்டணி உயர்மட்டப் பேச்சுக்கள் பலனளிக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. 1983 பொதுத் தேர்தலுக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் எங்களைவிட்டு அவர்கள்வெளியேறிவிடுவார்கள்."

—என்று அமைச்சர் 'தேவா' இப்பேட்டியில் தெரிவித்துள்ளார்.

★ ★ ★

மின்சாரத்தை சிக்கனமாகப் பாவியுங்கள் என்பது ஒரு பொதுவான கோரிக்கை.

சில வீதிகளில் இரவில் மின் வெளிச்சம் இல்லாவிட்டாலும், பகலில் ஜோராக எரிந்துகொண்டிருக்கிறது.

ஒரு உதாரணம்: யாழ். நகரிலுள்ள ஒரு வீதியில் நேற்றுப் பகல் ஒரு மணிவரை மின்விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன!

'ஊடுருவி'

## சேபால பிணமனு மீது இன்று தீர்ப்பு

[கொழும்பு]

இத்தாலிய விமானத்தைக் கடத்திய இலங்கையரான சேபால எக்கநாயக்காவை பிணையில் விடமுடியுமா என்பது குறித்து இன்று கொழும்பு மஜிஸ்திரேட் நீதவான் தீர்ப்பு வழங்குவார்.

சேபாலஎக்கநாயக்கா மீது அச்சுறுத்திப்பணம் பறித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டதைத் தொடர்ந்து இம்மாதம் 16ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. [வெ]

## ரோந்து நடவடிக்கை அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் இராணுவத்தினரும் பொலிசாரும் கூட்டு ரோந்து நடவடிக்கையிலீடுபடுவது அதிகரிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்குரியபகுதிகளை கண்காணிப்பதில் தமது கவனத்தை திருப்பியுள்ளனர். காங்கேசன்துறை, தெல்லிப்பழை உட்பட சில இடங்களில் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட இளைஞர்கள் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரெஞ்சு திரைப்பட விழா

[யாழ்ப்பாணம்]

பிரெஞ்சு திரைப்பட விழா டிசம்பர் 15ம் திகதி தொடக்கம் 83ஜனவரி 15ம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. [மா]

## 2வது படக்காட்சி இல்லை

மாலை 6 மணிக்குப் பின்னர் சனநடமாட்டம் குறைந்துவருவதால், சினிமா தியேட்டர்களில் 2வது படக்காட்சிநடைபெறுவதில்லை.

## மரண அறிவித்தல்

### கதிர் சிவசுப்பிரமணியக்குருக்கள்

மாதகல் நுணசை கதிர் சிவசுப்பிரமணியக்குருக்கள் (மணி ஐயா) சிவபதமடைந்து விட்டார். அன்னார் அமரர் கதிரவேற்குருக்களினதும் சுப்புலட்சுமி அம்மாவினதும் அன்பு மகனும், புவனசுந்தரி அம்மாளின் அன்புக்கணவரும், சிவாஜினி, சிவலோஜினி, சிவராஜினி, சிவதாரிணி ஆகியோரின் அன்புத்தந்தையும், மாதகல் கதிர் செல்லப்பாக்குருக்கள், திருமதி சரோஜினிதேவி இரவீந்திரநாதசர்மா (வவுனியா சிந்தாமணிப்பிள்ளையார் கோவில்), கதிர் தர்மலிங்கக்குருக்கள் ஆகியோரின் சகோதரருமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 12-7-82 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

3845

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் ஜூலை மீ 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.D. 100236/81
Eelanadu—P. O. Box 49, Tleegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.